பக்கங்கள்: பதினான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 பங்குனி 03 வெள்ளிக்கிழமை (16-03-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:110

## பெர்ணான்டஸ் ராஜினாமா



புதுடில்லி,மார்ச்16

ஆயுதக் கொள்வனவு ஊழல் மோசடி தொடர்பாக வெளியான குற்றச சாட்டுக்களை அடுத்து இந்தியாவின் தேசிய பாதுகாப்பு அமைச்சரும் சமதாக் கட்சியின் தலைவருமான ஜோர்ஜ பெர்ணான்டஸ் தமது பதவியை ராஜினாமாச் செய்துவிட்டார். ஆயுதப்பேர ஊழல் தொடர்பாக பாதுகாப்பு அமைச்சர் பதவிவிலக வேண்டும் என்று பாரதீய ஜனதாக் கட்சி கூட்டணி அரசில் அங்கம் வகிக்கும் திரிணாமுல் காங்கிரஸ் கட்சி வற்புறுத்தியதை அடுத்தே பெர்ணான்டஸ் ராஜினாமாச் செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை - பெர்ணான்டஸின் பதவி விலகலை பிரதமர் வாஜ்பாய் ஏற்றுக் கொள்ளாததை ஆட்சேபித்து ஆளும் கூட்டணி அரசில் இருந்து விலகுவதாக திரிணாமுல் காங்கிரஸின் தலைவி மமதா பனர்ஜி நேற்று அறிவித்தார். திரிணாமுல் காங்கிரஸின் இந்த முடிவு வாஜ்பாயின் அரசுக்கு நெருக்கடியை ஏற்படுத்தாது என்று அவதானிகள் தெரிவித்தனர். (ஐ-10)

(முன்வந்த செய்தி 11 ஆம் பக்கத்தில்)



நேற்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த உலக திருச்சபையின் பொதுச் செயலாளர் வணபிதா கலாநிதி கொன்ராட் றெய்ஸெர் யாழ்.ஆயர் இல்லத்தில் சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக்குமான மக்கள் குழு பிரதிநிதிகளைச் சந்தித்தபோது எடுக்கப்பட்ட படம்.

யாழ்.ஆயர் அதிவண.தோமஸ் சௌந்தரநாயகம் உரையாற்றுவதையும் - திருச்சபைப் பிரதிநிதியுடன் நல்லை ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள், தென்னிந்தியத் திருச்சபைப் பேராயர் கலாநிதி எஸ்.ஜெபநேசன் ஆகியோரும் மக்கள் குழு உறுப்பினர் டி.ஆர். அருமைநாயகமும் அமர்ந்துள்ளனர். (ஐ-5)

# ஐரோப்பிய ஒன்றியத் தலைவருடன் ஜனாதிபதி இன்று முக்கிய சந்திப்பு

## சமாதான முயற்சி குறித்து இருவரும் விவாதிப்பர்

பிரசெல்ஸ்,மார்ச்16

**ஐரோப்பிய நாடுகளுக்கான விஜயத்தின் ஒரு கட்டமாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இன்று பெல்ஜியத் தலைநகர் பிரசெல்ஸில் ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைவர் ரோமானோ தோடியை சந்தித்து முக்கிய பேச்சு நடத்தவுள்ளார்.**

**தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இலங்கை அரசு நடத்தவுள்ள நேரடிப் பேச்சுக்கள் தொடர்பான ஐரோப்பிய ஒன்றியத்தின் நிலைப்பாடு இன்றைய சந்திப்பின்போது வெளியிடப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.**

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் நடைபெறவுள்ள நேரடிப் பேச்சு வார்த்தை, இலங்கையின் பொருளாதார நிலை, ஐரோப்பிய ஒன்றியத்தின் கடன் உதவிகள் தொடர்பாக இன்றைய பேச்சுக்களில் விவாதிக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

(14ஆம் பக்கம் பார்க்க)

## 162 பயணிகளுடன் ரஷ்ய விமானம் கடத்தப்பட்டது

லண்டன்,மார்ச்16

ரஷ்ய விமானம் ஒன்று 162 பயணிகளுடன் துருக்கியில் வைத்துக் கடத்தப்பட்டுள்ளது.

துருக்கியின் இஸ்தான்புல் விமான நிலையத்திலிருந்து புறப்பட்டு மொஸ்கோவுக்குச் சென்று கொண்டிருந்த அந்த விமானம் செச்சினிய நாட்டவர்கள் என்று தம்மைக் கூறிக்கொண்ட இருவரால் கடத்தப்பட்டதாக துருக்கியின் போக்குவரத்து அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இச்சம்பவத்தின் போது விமான ஊழியர்களில் ஒருவருக்குக் காயம் ஏற்பட்டதாகவும் மத்திய கிழக்கு நோக்கித் தற்பொழுது பறந்துகொண்டிருக்கும் அந்த விமானத்துடனான தொடர்புகள் யாவும் துண்டிக்கப்பட்டுள்ளதாகவும் நேற்றிரவு அறிவிக்கப்பட்டது. (ஐ-10)

## முகமாலையில் சிப்பாய் காயம்

கொழும்பு,மார்ச்16

முகமாலைப் பகுதியில் உள்ள படையினரின் முன்னரங்க நிலைகள் மீது நேற்றுமுன்தினம் விடுதலைப் புலிகள் மோட்டார் தாக்குதலை மேற்கொண்டதில் சிப்பாய் ஒருவர் காயம் அடைந்ததாக விசேட ஊடகத் தகவல் நிலையம் அறிவித்துள்ளது.

எழுதுமட்டுவாழுக்குத் தெற்கே கரடியன்காடு என்னும் இடத்தில் நடந்த

(14ஆம் பக்கம் பார்க்க)

## போரை நிறுத்தி பேச்சு நடத்த உலக திருச்சபை அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்

### யாழ்.வந்த பிரதிநிதிகளிடம் மக்கள் குழு வலியுறுத்து

யாழ்ப்பாணம்,மார்ச்16

போர்நிறுத்தம் செய்து சமாதானப பேச்சுகளை முன்னெடுப்பதற்கு உலக திருச்சபை இலங்கை அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்.

நேற்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த உலக திருச்சபையின் பொதுச் செயலாளர் வணபிதா கலாநிதி கொன்ராட் றெய்ஸெரிடம் சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துககுமான மக்கள் குழுவின் பிரதிநிதிகள் மேற்கண்டவாறு வலியுறுத்தினர்.

ஜெனீவாவை தலைமையகமாகக் கொண்ட உலக திருச்சபையின் பொதுச் செயலாளர் கொன்ராட் றெய்ஸெர் மற்றும் உலக திருச்சபையின் சர்வதேச விவகாரங்களுக்குரிய செயலாளர் கலாநிதி கிளைமன்ற் ஜோன், கொழும்பிலுள்ள தேசிய திருச்சபையின் செயலாளர் வணபிதா எபநேசர் அடங்கிய குழுவினரே நேற்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்தனர்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## அமெரிக்கத் தூதரின் கூற்றுக்கு யாழ். பல்கலை சமூகம் கண்டனம்

### எதிர்ப்பைக் காட்ட 'பொங்கு தமிழ்' நிகழ்வு

யாழ்ப்பாணம்,மார்ச்16

அண்மையில் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்ட சமயம் அமெரிக்கத் தூதர் அஸ்லி வில்ஸ் தமிழ் மக்களின் தாயகக் கோட்பாடு, சுயநிர்ணய உரிமை ஆகியன தொடர்பாக வெளியிட்ட கருத்துக்களை யாழ்.பல்கலைக்கழகச் சமூகம் கண்டித்துள்ளது. அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் 'பொங்கு தமிழ்' எழுச்சி நிகழ்வை விரைவில் நடத்துவதென நேற்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக மாணவர் பிரதிநிதிகளும், ஏனைய பிரிவுகளின் பிர

(14ஆம் பக்கம் பார்க்க)

## 21 அமைப்புக்களை தடைசெய்யும் பிரேரணை பிரிட்டிஷ் நாடாளுமன்றில் நிறைவேறியது

பிரிட்டனில் கடந்த மாதம் 19ஆம் திகதி அமுலுக்கு வந்த பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் விடுதலைப்புலிகள் உட்பட 21 அமைப்புக்களைத் தடை செய்யும் பிரேரணை பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் இரவு நிறைவேற்றப்பட்டது.

இந்தப் பிரேரணையை எதிர்த்து தொழிற்கட்சி உறுப்பினர்கள் உரையாற்றினர்.

இந்தப் பிரேரணை வாக்கெடுப்புக்கு விடப்பட்டவேளை ஆளுங்கட்சியான தொழிற்கட்சியைச் சேர்ந்த 17 உறுப்பினர்கள் எதிராக வாக்களித்தனர். எதிர்க்கட்சிப் பிரதிநிதிகள் எவரும் வாக்கெடுப்பில் பங்குபற்றவில்லை. அவ்வாறிருந்தும் பிரேரணை அதிகப்படி வாக்குகளால் நிறைவேறியது.

இந்தப் பிரேரணையை அடுத்து பிரபுகள் சபையில் விவாதிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்ட பின்னரே அமுலுக்கு

(14ஆம் பக்கம் பார்க்க)

## மகாலிங்கத்தின் இறுதி ஊர்வலத்தில் பெருந்திரளான மக்கள் பங்கேற்பு

யாழ்ப்பாணம், மார்ச்16

இந்து சமய எழுச்சியாளரும், திறமை மிக்க அரச நிர்வாகியுமான அமரர் ஆ.மகாலிங்கத்தின் இறுதி ஊர்வலத்தில் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்டு தமது அஞ்சலியைத் தெரிவித்தனர்.

ஓர் அரசியல் பிரமுகர் அல்லது சமயத் தலைவர் ஒருவருக்கு நடைபெறுவது போன்று மக்கள் சோகக் கடலில் ஆழ்ந்திருக்க அவரின் பூதவுடல் திருநெல்வேலியில் இருந்து வலிகாமம் தெற்கு பிரதேசத்துக்கு இறுதி ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டுப் பின்னர் மீண்டும் கொண்டு வரப்பட்டு திருநெல்வேலி மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

(14ஆம் பக்கம் பார்க்க)

## 'சிஹல உறுமய' பிரகடனம்

கொழும்பு, மார்ச்16

விடுதலைப் புலிகள் அமைப்புடன் பேச்சு நடத்த எடுக்கும் முயற்சியை கைவிட்டு அந்த அமைப்புக்கு எதிராக முழுஅளவில் யுத்தத்தை ஆரம்பிக்க வேண்டும்.

இவ்வாறு அரசிடம் கோரும் பிரகடனம் ஒன்றை 'சிஹல உறுமய' நாளை வெளியிடவிருக்கின்றது.

நாளை இடம்பெறும் அதன் வருடாந்த மாநாட்டில் இந்தப் பிரகடனம் வெளியிடப்படும் என்று அதன் தலைவர் திலக் கருணாரத்ன தெரிவித்தார். (ஐ-3)

## கல்வி உபகரணங்களைக் கப்பலில் ஏற்றிவர செஞ்சிலுவைக் குழு மறுப்பு!

கொழும்பு,மார்ச்16

யாழ்.மாவட்ட பாடசாலை மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளுக்கான பொருள்களை செஞ்சிலுவை சர்வதேசக் குழுவின் கப்பலில் எடுத்து வருவதற்கு அக்குழு மறுப்புத் தெரிவித்துள்ளது.

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் கப்பல் போக்குவரத்துக்குப் பொறுப்பான அதிகாரி ஒருவருக்கும் வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வியமைச்சு அதிகாரிக்கும் இடையில் நேற்று இது தொடர்பாக இடம்பெற்ற கலந்துரையாடலின்போது இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது.

கொழும்பில் உள்ள அந்த அமைப்பின் அலுவலகத்தில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் கலந்துகொண்ட மாகாணக் கல்வியமைச்சு அதிகாரி, கல்வி உபகரணங்களை யாழ்ப்பாணத்துக்கு எடுத்துச் செல்வதில் உள்ள

(14 ஆம் பக்கம் பார்க்க)

# மரண அறிவித்தல்கள்

## J.L.A.செல்வநாயகம் (செல்வம்)

வசாவிளானைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட J.L.A.செல்வநாயகம் அவர்கள் நேற்று (15.03.2001) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் கிறேஸ் யசிந்தா அவர்களின் அன்புக் கணவரும் வசந்தன், பியூலா, நிரோஷன் ஆகியோரின் அன்புத் தகப்பனும் காலஞ்சென்ற யோசவ் இராசதுரை - மரியநாயகி இராசதுரை ஆகியோரின் அன்பு மகனும் திருமதி V.றீட்டா, காலஞ்சென்ற குறோனா, காலஞ்சென்ற இருதயராஜன் ஆகியோரின சகோதரனும் J.யோசவ், ராணி யோசவ் ஆகியோரின் அன்பு மருமகனும் றோசமுத்துவின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (16.03.2001) வெள்ளிக்கிழமை காலை 9.30மணிக்கு (பு.நே.) பரியோவான் தேவாலயத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு பின் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

தகவல்:-
கிறேஸ் யசிந்தா செல்வநாயகம
(மனைவி)

*இல.26, சுவாட்ஸ் லேன்,*
*சுண்டுக்குளி,*
*யாழ்ப்பாணம்.* (85503)

## திருநாவுக்கரசு சுஜீகலா (சுஜி)

நவாலி வடக்கு, மானிப்பாயைச் சேர்ந்த திருநாவுக்கரசு தம்பதிகளின் அன்பு மகள் சுஜீகலா 14.03.2001 புதன்கிழமை காலமானார்.

அன்னார் திருநாவுக்கரசு தம்பதிகளின் அன்புமகளும், சூட்டி, சுபாஜினி ஆகியோரின் அன்புத் தங்கையும் நடராசா புனிதவதியின் அன்புப் பெறாமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 16.03.2001 காலை 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிப்பிலி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
நடராசா - புனிதவதி
தம்பதிகள்

*நாச்சிமார்கோயில் வீதி,*
*நவாலி வடக்கு,*
*மானிப்பாய்.* (85508)

## யா/வண். நாவலர் மகா வித்தியாலய அதிபரை பாராட்டி வாழ்த்துகின்றோம்

### திரு.ந.சிவராஜா (Sp.Trd., S.L.P.S.)

எமது பாடசாலை அதிபர் திரு.ந.சிவராஜா அவர்கள் இலங்கை அதிபர் சேவை தரம் 2 இற்குப் பதவி உயர்வு பெற்றதையிட்டு பாராட்டுவதோடு அவரது கல்விப் பணி மேலும் சிறக்க மனதார வாழ்த்துகின்றோம்.

யா/வண்.நாவலர் ம.வி.
வண்ணார்பண்ணை.
யாழ்ப்பாணம். (85510)

ஆசிரியர்கள்,
மாணவர்கள்.

## கண்ணீர் அஞ்சலி

### அமரர் ஆறுமுகம் மகாலிங்கம்

(பிரதேச செயலர் - வலி.தெற்கு, உடுவில், உபதலைவர் - இந்துசமயப் பேரவை)

அன்னாரின் மறைவுச் செய்தி அறிந்து அதிர்ச்சியும் மிகுந்த மனவேதனையும் அடைகிறோம்.

அன்னாரின் பிரிவால் மனங்கலங்கித் தவித்து நிற்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச சபை,
சுன்னாகம்.
(85507)

வலி.தெற்கு
சனசமூக நிலையங்களின் சமாச
நிர்வாகிகள், அங்கத்தவர்கள்.

# தாவடி வாழ் மக்களின் அஞ்சலிநயப்பு

## அமரர் ஆறுமுகம் மகாலிங்கம் அவர்களுக்கு

(வலி.தெற்கு பிரதேச செயலர், துணைத் தலைவர் - இந்து சமயப் பேரவை)



**இளமையின் எழுச்சி நிரம்பப் பெற்றவர்**
**கூரிய மதிநுட்பத்துடனும், விரைந்து முடிவுகளை -**
**- மேற்கொள்ளும் ஆற்றலுடனும்**
**தம் குறிக்கோளை எய்துபவர்**
**கருமங்களைச் சத்திய நெறியில் ஆற்றுப்படுத்தும் நெறியினர்**
**சீரியோர் அவையில் சிறப்பிடம் கொண்டவர்**
**காட்சிக்கு எளியராயினும்**
**கடிதினில் விரைந்திடும் முகிலினைப் போன்றவர்**
**அனைத்தையும் காத்தளிப்பவர்**
**தம் கடப்பாடுகள் அனைத்தையும்**
**தவறாது உவப்புடன் ஒப்பேற்றுபவர்**
**இதமான இளந்தென்றல் போன்றது அவர் ஸ்பரிசம்**
**அனைத்திலும் தம் தண்ணளி சொரிபவர்**
**- இருக்கு வேதம் (தமிழாக்கம்)**

இருக்கு வேதத்தில் இருந்து இங்கு எடுத்தாளப்பெற்ற
நல்லியல்புகள், இலட்சணங்கள் அனைத்தும் தன்னகத்தே
ஒருங்கே அமையப்பெற்று, இறை அவன் இப்பணி தந்தது மக்கள் பணிக்கே
என ஓர்ந்தும், தாயின் கனிவும் வாஞ்சையும், தந்தையின் கண்டிப்பும்
பெருமிதமும் உளத்தடக்கி, உரியார்க்கு உரியதை, உரியதாக்கி
அவரவர் பேறும் இன்பமும் தனதெனப் பெரிது வந்த பெருமகனார்
**ஆறுமுகம் மகாலிங்கம் அவர்கள்**
எங்கள் எல்லோரையும் ஏதிலிகளாக ஏங்க விட்டுப்
பற்றற்றான் பற்றைப் பற்றி இறைவன் இணையடி சார்ந்தான்
காலத்தோடு காலமாகி கலந்துவிட்டார். எங்களை விட்டுப்
பிரிந்துவிட்டார். இவர் இழப்பு தாங்கொணாதது.
ஈடு செய்ய முடியாதது.......

அழுவாரை அழுவார்தாம் ஆற்றவேண்டும்
துணைவரை இழந்து துடிக்கும் மனைவி
தந்தையை இழந்து தவிக்கும் மகன்
பற்றுக்கோடில்லாது பரிதவிக்கும் உற்றார், உறவினர்கள்
வெற்றுச் சூனியத்திலிருந்து மீளமுடியாத இலட்சோப இலட்சம்
அன்பர்களின் துயரில் தாங்களும் கையறு நிலையில்
அமிழ்ந்து கவலும் **தாவடி வாழ் மக்கள்**

அருள்மிகு ஸ்ரீ அம்பலவாண வேத விநாயகர் கோயில் நிர்வாக சபை
ஸ்ரீ அம்பலவாண கந்தசுவாமி கோயில் பரிபாலன சபை
ஸ்ரீ காளி அம்பாள் தேவஸ்தானம்
ஸ்ரீ வட பத்திரகாளி கோயில் தேவஸ்தானம்
நெல்லொரு பகுதி பிள்ளையார் கோயில் பரிபாலன சபை
யா/தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை

மகளிர் ஆய்வு அபிவிருத்தி நிறுவனம்
ஸ்ரீ இராமகிருஷ்ண சேவாச்சிரமம்
தாவடி விவசாயிகள் சம்மேளனம்
தாவடி இந்து மயான அபிவிருத்திச் சபை
அம்பாள் விளையாட்டுக் கழகம்

கிராம அபிவிருத்திச் சங்கம் - தாவடி வடக்கு
கிராம அபிவிருத்திச் சங்கம் - தாவடி தெற்கு
கிராம அபிவிருத்திச் சங்கம் - தாவடி கிழக்கு
கிராம அலுவலர் - J/192
கிராம அலுவலர் - J/193
கிராம அலுவலர் - J/194

சமுர்த்தி செயலணி - தாவடி தெற்கு
சமுர்த்தி செயலணி - தாவடி கிழக்கு
சமுர்த்தி செயலணி - தாவடி வடக்கு

தாவடி மத்திய சனசமூக நிலையம்
ஸ்ரீ காளியம்பாள் சனசமூக நிலையம்
காந்தி கலைவளர்ச்சி மன்றம் - சனசமூக நிலையம்
காமாட்சி அம்பாள் சனசமூக நிலையம்
இன்ஸ்ரிரியூட் ஒவ் பாமி பியூற்றிசன், தாவடி

(85498) **- தாவடி வாழ் மக்கள்.**

## சாரணர் தின விழா

யாழ்ப்பாணம்,மார்ச்16

யாழ்.மாவட்ட சாரணர் கிளைச் சங்கம் நடத்தும் உலக சாரணர் தின நிகழ்ச்சி எதிர்வரும் 19ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

சாரணர் குழுக்களின் சிறப்பு நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன. (ஜ)

## மத்திய கல்லூரி மாணவர்கள் இரத்த தானம்

யாழ்ப்பாணம்,மார்ச்16

யாழ்.மத்திய கல்லூரியில் 185 ஆவது ஆண்டு நிறைவினை முன்னிட்டு கல்லூரியின் இன்ரறக் கழகத்தினால் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு நேற்று இரத்த தானம் வழங்கப்பட்டது.

யாழ்.மத்திய கல்லூரியில் வைத்து வைத்தியசாலையின் இரத்த வங்கிப் பிரிவினால் மாணவர்களிடமிருந்து இரத்தம் பெறப்பட்டது.

இரத்ததானம் செய்வதற்கு 200 மாணவர்கள் தயார் நிலையில் இருந்த போதும் 40 மாணவர்களே இரத்ததானம் செய்வதற்கு தகுதியானவர்கள் என இனங்காணப்பட்டு அவர்களிடம் இரத்தம் பெறப்பட்டது. (ஜ-5)

## மெய்வல்லுநர் போட்டி

யாழ்ப்பாணம்,மார்ச்16

தென்மராட்சி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையேயான மெய்வன்மைப் போட்டிகள் நாளையும் நாளை மறுதினமும் காலை 9 மணிமுதல் கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

தொடர் போட்டிகள் எதிர்வரும் திங்கடகிழமையும், செவ்வாய்க்கிழமையும் நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் இடம் பெறவுள்ளன என்று வலயப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஜ-3)

## பயணிகள் பஸ் குடைசாய்ந்து ஏழு பேர் பலி

கொழும்பு,மார்ச்16

இரததினபுரியில் இருந்து நேற்றுக் காலை சிவனொளிபாத மலைக்குச் சென்ற பயணிகள் பஸ் ஒன்று 75 மீற்றர் ஆழமான பள்ளமொன்றில் குடைசாய்ந்ததில் சாரதி நடத்துநர் உட்பட 7 பேர் உயிரிழந்தனர். 24 பேர் படுகாயமடைந்தனர்.

சிவனொளிபாத மலைக்கு அண்மையில் உள்ள குருவிட்ட என்னும் இடத்தில் இந்தச் சம்பவம் இடம் பெற்றது.

படுகாயமடைந்தவர்களில் பலரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

சிவனொளிபாத மலைக்கு யாத்திரை சென்றவர்களே இந்த அனர்த்தத்தில் சிக்கியதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஜ-7)

ராஜா
யாழ்ப்பாணம்
தமிழில்
டைட்டானிக்
காட்சிகள்: 10.30, 2.30 (பு.நே.)
(C15741)

லக்ஷ்மி இணுவில்
கார்த்திக், மந்த்ரா
நடித்த
கண்ணன் வருவான்
(ரீல்ஸ்) காட்சிகள்: 11.00, 2.30 (பு.நே.)
அடுத்த வெளியீடு:-
உரிமைக் குரல்

நாகம்ஸ்
சுன்னாகம்
பிரசாந்த், தேவயானி,
பிரகாஷ்ராஜ்
நடித்த
அப்பு
(ரீல்ஸ்)
காட்சிகள்:11.00, 2.30
(புதிய நேரம்) (85458)

# உதயன்

## மணல் வீடு கட்டும் அரசு

பயங்கரவாத அமைப்புகள் எனக் கருதி பிரிட்டன் வெளியிட்ட பட்டியலில் தமிழீழ விடுதலைப் புலிகளின் பெயரும் இடம்பெற்ற விடயம் இன்னும் உத்தியோக பூர்வமாக முற்றாக்கப்படவில்லை.

இந்தப் பட்டியலை அங்கீகரிக்கக் கோரி அந்த நாட்டின் உள்துறை அமைச்சர் கொண்டு வந்துள்ள பிரேரணை நிறைவேற்றப்படும்போது, விடுதலைப் புலிகளின் பெயர் நீக்கப்படக்கூடும் என்று சில வட்டாரங்களில் எதிர்வு கூறப்படுகிறது. அது எந்தளவுக்கு நம்பிக்கையானது என்பதனைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

அது ஒருபுறமிருக்க, பிரிட்டனின் பயங்கரவாத அமைப்புகள் பட்டியலில் விடுதலைப் புலிகளின் பெயர் இடம்பெறவேண்டும் என்பதற்காக அயராது உழைத்த அரசாங்கத் தரப்பு— அறிவிப்புக் கிடைத்தவுடன் பெரிதும் ஆரவாரப்பட்ட அரச பிரதானிகள் — அதனூடு தங்களால் பெரிதாக எதனையும் சாதித்துவிட முடியாது என்றவாறு இப்போது தணிந்த குரலில் பேசுகிறார்கள்!

விடுதலைப் புலிகளைப் பிரிட்டனைக் கொண்டு தடை செய்விப்பதற்கு ஆதரவு திரட்டிய முதலாவது அரச பிரதானி, அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரே. தமது சகல திறமைகளையும் ஆகக்கூடிய அளவுக்குத் திரட்டி, புலிகளுக்கு எதிரான வாதங்களைப் பிரிட்டிஷ் அரச அதிகாரிகள் முன் வைத்தவர் அவரே. விடுதலைப் புலிகளை பிரிட்டன் தடை செய்யாவிடில் அந்த நாட்டுடனான ராஜதந்திர உறவுகளை முறித்து விட நேரிடலாம் என்று கூட அவர் எச்சரித்திருந்தார்.

ஆனால் இப்போது அவர் விடுதலைப் புலிகளுக்கு எதிரான தடையைப் பெரிதும் பொருட்படுத்தாதவர் போலப் பேசுகிறார். வெளிநாடுகள் புலிகளைத் தடைசெய்தது குறித்து நாம் புளகாங்கிதம் கொள்ள வேண்டியதில்லை. இதற்காக நாங்கள் பெரிய நாடகம் நடத்த முடியாது. பெரிதுபடுத்திக் கற்பனைகளைச்செய்யவும் கூடாது. அது குறித்து வெற்றிக் களிப்புற முடியாது என்றெல்லாம் சொல்கிறார்.

நிதி அமைச்சர் பட்டி வீரக்கோனும் புலிகள் மீதான பிரிட்டனின் தடை பெரிதாக எதனையும் சாதித்துவிட முடியாது என்ற அர்த்தப்படப் பேசுகிறார்.

பிரிட்டன் புலிகள் இயக்கத்தைத் தடை செய்து விட்டால் எமது பிரச்சினை தீர்ந்து விடாது. அதனாலேயே அரசாங்கம் ஒரு படி மேலே சிந்தித்துப் பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு முயற்சி செய்து வருகிறது — என்று அவர் சொல்கிறார்.

தடைக்கு எதிராகப் புலிகள் போராடுவர். அவர்களிடமும் திறமையான சட்டத்தரணிகள் இருக்கிறார்கள். அதன் மூலம் தடை நிறைவேறாவிட்டால் என்ன செய்வது? இதனை மனதிற் கொண்டே பிரிட்டிஷ் அரசின் தடையை அரசாங்கம் ஒரு தீர்வாக நம்பியிருக்கவில்லை— என்று நிதி அமைச்சர் நாடாளுமன்றத்தில் கூறினார்.

வெளிநாடுகளைக் கொண்டு புலிகளைத் தடை செய்விப்பதால், பேச்சுவார்த்தை மேசையில் அவர்களின் பேரம் பேசும் குரலைத் தணிக்க இயலும் என்ற சிந்தனையுடனேயே அரசு அதில் அதீத அக்கறை காட்டுகிறது. அரசின் இத்தகைய சிந்தனை சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு ஏற்ற சாதக நிலைமையைக் குழப்பும் என்பதனைப் புரிந்து கொள்ளாமல் அது நடந்து கொள்கிறது. இது மணல் வீடு கட்டும் தன்மையதே. விளைவு நாட்டை மேலும் நெருக்கடிக்குள் தள்ளும் என்பது நிச்சயம்!

ஜப்பானிய உதவித்திட்டத்தின் கீழ்

# யாழ். மக்களுக்கென ஒதுக்கப்பட்ட 32 ஆயிரம் கூரைத் தகடுகள் மாயம்!

## தென்பகுதிக்கு கைமாற்றப்பட்டு விட்டனவா?

யாழ்ப்பாணம், மார்ச் 16

ஜப்பானிய உதவித் திட்டத்தின் கீழ் யாழ். மாவட்டத்துக்குக் கிடைக்க இருந்த 32 ஆயிரம் வீட்டுக் கூரைத் தகடுகள் தென் பகுதியைச் சேர்ந்த மாவட்டம் ஒன்றுக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

யாழ். மாவட்டத்தில் வறுமைக் கோட்டின்கீழ் வாழும் ஆயிரம் குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு வீடுகளை அமைப்பதற்கென ஒவ்வொரு குடும்பத்துக்கும் 28 கூரைத் தகடுகள் வழங்குவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டிருந்தன.

ஜப்பானிய உதவித் திட்டத்தின் கீழ் கிடைத்த இந்தக் கூரைத் தகடுகளை வழங்குவதற்கு இங்குள்ள பத்து பிரதேச செயலர் பிரிவுகளிலும் தலா நூறு குடும்பங்கள் வீதம் தெரிவு செய்யப்பட்டிருந்தன.

கொழும்புக்குக் கொண்டு வரப்பட்ட இந்தக் கூரைத் தகடுகளை யாழ்ப்பாணத்துக்கு எடுத்துவருவதற்கான கப்பல் கட்டணத்தை வழங்குவதற்கு வடக்கில் மீள் குடியமர்வு, புனர்வாழ்வு, புனரமைப்பு அதிகார சபை முன்வந்தது.

இதற்கென சபையினால் 20 லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டபோதும் யாழ்ப்பாணத்துக்கு அனுப்புவதற்கு தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்த கூரைத் தகடுகள் வேறு மாவட்டத்துக்குத் திடீரென மாற்றம் செய்யப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இது தொடர்பாக அமைச்சு மட்டத்தில் தெரியப்படுத்தப்பட்டபோதும் கூரைத் தகடுகள் யாழ்ப்பாணத்துக்கு கிடைக்காமல் போனதற்குக் காரணம் எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

இதேவேளை —

ஜப்பானிய உதவித்திட்டத்தின் கீழ் தென்பகுதியிலுள்ள பிரதேச செயலர் பிரிவுகளுக்கு ஒதுக்கப்பட்ட கூரைத்தகடுகள் அங்குள்ளவர்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டுவிட்டது என்றும் கூறப்படுகிறது. (ஐ-5)

# "பட்ஜெட்" விவாதம் நடக்கிறது நிதி அமைச்சரோ ஐரோப்பாவில்!

## நாடாளுமன்றில் எதிரணி எம். பி. சாடல்

கொழும்பு, மார்ச் 16

வரவு - செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டு விவாதம் நடைபெறும் வேளையில் நிதி அமைச்சர் (ஜனாதிபதி சந்திரிகா) ஐரோப்பாவுக்குச் சென்றுவிட்டார். இது அரசின் இறுமாப்பைக் காட்டுகின்றது. அரச செலவினத்தில் 8 சதவீதத்தைப் பாரிய அமைச்சரவைச் செலவீனத்திற்கு ஒதுக்கிவிட்டு 6 மாத காலத்திற்கு மக்களை எதுவும் கேட்கக்கூடாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

களுத்துறை மாவட்ட (ஐ. தே. க.) எம். பி மகிந்த சமரசிங்க புதன்கிழமை நாடாளுமன்றத்தில் உரையாற்றும் போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வரவு - செலவுத் திட்ட ஒதுக்கீட்டுச் சட்டம் மூன்றாம் நாள் விவாத உரையில் சமர்ப்பிக்கப்பட்ட வரவு - செலவுத் திட்டத்தில் முன்னுக்குப் பின் முரணான அம்சங்கள் வெளியிடப்பட்டிருப்பதாகவும் சாடினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது —

225 எம். பிக்களில் 40 சதவீதமானோர் அமைச்சர்களாகவும், பிரதியமைச்சர்களாகவும் உள்ளனர். வரவு-செலவுத் திட்டத்தில் நிதி, திட்டமிடல் ஒதுக்கீடுகளிலும் பார்க்க பாதுகாப்புக்கு அதிக தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது தெற்காசியாவிலேயே பாதுகாப்புக்கு அதிகளவு செய்யப்பட்டிருக்கும் ஒதுக்கீடு என்று இனக்கற்கைகளுக்கான ஆய்வு நிலையத்தைச் சேர்ந்த சிரேஷ்ட ஆய்வாளர் முத்துக்கிருஷ்ணர் சர்வநாதன் தெரிவித்திருக்கிறார்.

அத்துடன் இதுவொரு யுத்த வரவு செலவுத்திட்டமெனவும் நாடு இராணுவ மயமாகி வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மின்சாரக் கட்டணங்கள் மார்ச் முதல் அதிகரிக்கப்பட்டுள்ளன. இவை மேலும் உயர்த்தப்படும் சாத்தியம் உண்டு.

மேலும் ஊதிய உயர்வு வழங்கப்படமாட்டாது என்று அரசு அறிவித்துள்ளது. பல்கலைக்கழகக் கல்வியை தனியார் மயமாக்க உத்தேசிக்கப்பட்டுள்ளதா? உலக வங்கி, சர்வதேச நாணய நிதிய அறிவுறுத்தலின் பிரகாரம் இவை இடம்பெறுகின்றனவா?

இந்த வரவு செலவுத் திட்டம் பரும்படியாக்கப் பொருளாதாரத் திட்டத்தைப் பிரதிபலிக்கவில்லை. பாரியளவு வர்த்தக நிலுவையும், வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரிக்கும் என்பதையுமே இது சுட்டிக்காட்டுகின்றது — என்றார். (க)

# சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், மார்ச் 16

மிருசுவில் வடக்கு கோவிற்குளம் அம்பாள் என அழைக்கப்படும் மகேஸ்வரி அம்பிகைக்கு நாளை சனிக்கிழமை மாலை நவோத்தர சகஸ்ர சங்காபிஷேகமும் மாலை மணவாளக்கோல உற்சவமும் நடைபெறவுள்ளன.

சங்காபிஷேகக் கிரியைகளை சிவஸ்ரீ சி நீலகண்டக் குருக்களும், து. விவேகானந்தக் குருக்களும் நடத்தி வைப்பார்கள். (க)

★ ★ ★

கந்தரோடை ஆலடி வீரகத்தி விநாயகர் ஆலய மணவாளக்கோல விழா எதிர்வரும் திங்கட்கிழமை நடைபெறும். அன்றைய தினம் நவோத்திர சகஸ்ர சங்காபிஷேகமும் இடம்பெறும்.

காலை 7 மணிக்கு யாக பூசை ஆரம்பமாகி 11மணிக்கு அபிஷேகம் நடைபெறும். (க-173)

★ ★ ★

சுழிபுரம் மேற்கு பெரியதம்பிரான் ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலய சங்காபிஷேகம் இன்று வெள்ளிக்கிழமை பகல் நடைபெறும்.

நண்பகல் அன்னதானம் நடைபெற்று சுவாமி வீதி வலம் வருதல் இடம்பெறும். (க-28)

★ ★ ★

சுழிபுரம் வீரபத்திரர் சமேத பத்திரகாளி அம்பாள் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவம் கடந்த செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து எட்டுத்தினங்கள் நடைபெறும். (க-139)

★ ★ ★

கொழும்புத்துறை வளன்புரம் சூசையப்பர் ஆலய வருடாந்தப் பெருவிழா இன்று 16 ஆம் திகதி தொடக்கம் 19 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

திரிதின ஆராதனைகள் தினமும் மாலை 4 30மணிக்கு திருச்செபமாலையுடன் நடைபெறும் என வளன்புரம் பங்குத்தந்தை அறிவித்துள்ளார் (கர)

# புலிகளுக்குத் தடை வந்தாலும் போராட்டம் ஓயமாட்டாது!

## சபையில் செல்லச்சாமி தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 16

விடுதலைப் புலிகளைபிரிட்டன் மட்டுமல்ல வேறு எந்த நாடுகள் தடை செய்தாலும் நீங்கள் நினைப்பது போன்று போராட்டம் ஓயாது. புலிகள் சந்திர மண்டலத்துக்கு போய்விடுவார்கள். நவீனம் வளர்ந்துவிட்ட காலத்தில்பிற்போக்கான சிந்தனைகளுக்கு இடமளியாதீர்கள்.

ஐ.தே.க தேசியப்பட்டியல் உறுப்பினர் எம். எஸ். செல்லச்சாமிநாடாளுமன்றத்தில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வரவு செலவு திட்ட விவாத உரையில் பேசிய அவர் மேலும் தெரிவிக்கையில்:—

வடக்கு — கிழக்கில் அன்று ஆயிரம் போராளிகள் இருந்தார்கள். பின்னர் அது இரண்டாயிரமாக உயர்ந்தது. தற்போது மிகப்பெரிய சக்தியாக அரச படைகளை எதிர்க்கும் மரபுவழி போர் முறைகளைக்கொண்டு விடுதலைப்புலிகள் விளங்குகின்றார்கள்.

பேச்சு வார்த்தையை ஆரம்பியுங்கள் என்று சர்வதேச சமூகம் கூறியும், நீங்கள் பொருட்படுத்தவில்லை. புலிகள் மூன்று முறை ஒருதலைப்பட்சமாக யுத்த நிறுத்தம் செய்தும் நீங்கள் உகந்த பதில் வழங்கவில்லை.

இன்னும் பத்தாயிரம் பேர் படைக்குத் தேவையெனக் கூறுகின்றீர்கள். எனவே பாதுகாப்பு செலவினங்கள் இன்னும் அதிகரிக்கப் போகின்றது. சமாதானமும் வரப்போவதில்லை. இது உறுதி.

17 ஆண்டுகால ஐ.தே.க.வின் ஆட்சியின் கொடுமை அப்போதுதான் யுத்தம் விரிவடைந்தது என்றெல்லாம் கூறுகின்றீர்கள். ஆனால் உங்கள் கடந்த ஆறு ஆண்டு கால ஆட்சியில் நடந்தேறியதுதான் என்ன? — இவ்வாறு அவர் கூறினார். (க)

## நாளை

பங்குனி 4

சனிக்கிழமை

திதி: அட்டமி

மாலை 7.06 வரை;

நட்சத்திரம்: மூலம்

பின் இரவு 03-05 வரை.

சுபநேரம்: 3.26 – 04 50

ராகுகாலம்: 09 .20 —10.50

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## உதயவாக்கு

ஒவ்வொரு மனிதனும் தான் படும் துயரத்துக்குத் தானே பொறுப்பாளி.

# இந்துக்கள் தலை நிமிர்ந்து வாழ அரும்பாடுபட்ட பெருந்தகை

## வடபிராந்திய இந்துப் பேரவை அனுதாபம்

யாழ்ப்பாணம், மார்ச் 16

இந்துக்கள் சொல்லொணாத துயரங்கள், யுத்த அனர்த்தம் மற்றும் மத மாற்றம் போன்றவற்றால் நலிவுற்றிருக்கும் வேளையிலும் அவர்கள் தலை நிமிர்ந்து வாழ அரும்பாடுபட்ட பெருந்தகை அமரர் ஆ. மகாலிங்கம்.

யாழ் இந்து சமயப் பேரவையின் உப தலைவரும், வடபிராந்திய இந்துப் பேரவையின் கௌரவ ஆலோசகரும், உடுவில், நல்லூர் பிரதேச செயலாளருமான ஆ. மகாலிங்கத்தின் மறைவு குறித்து வடபிராந்திய இந்துப்பேரவை விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:—

தாய் தந்தையரை இழந்தவர்களின் "..கதடி ...சைசிறுவர் இல்லத்தை" வளர்த்தெடுத்த, திருநெல்வேலி மணி மண்டபம் மட்டுவிலறச்சிக் கடைகளை அகற்ற தடை செய்த, "தெய்வீகப்பசுக்கள், இடங்களை பாதுகாப்பதற்கான சகல சமய நிறுவனங்களின் ஒருங்கிணைப்புக் குழுவை" உறுதியாக முன்னெடுத்துச் செல்ல ஆலோசனைகளை வழங்கிய தனித்துவம் மிக்க இந்து சமயத் தலைவர் அமரர் மகாலிங்கம் —யாழ் இந்து சமயப் பேரவையின் ஸ்தாபகர்களுள் ஒருவராக இருந்து இந்து சமய நிறுவனங்கள், ஆலயங்கள் அனைத்தையும் ஒரு கட்டமைப்பின் கீழ் கொண்டு வந்த அந்தப் பணியை மாற்றுவதற்கு வர்களின் உரிமைகளையும் மதித்த அன்னாரின் பிரிவு ஈழவள நாட்டில் குறிப்பாக யாழ். இந்துக்களைப் பொறுத்தவரை ஈடு செய்ய முடியாதது!

துயர் மிகும் இவ்வேளை அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறுவதுடன் அவரது ஆன்மா பார்வதி சமேத பரமேஸ்வரப் பெருமானது பாதங்களை அடைந்து சாந்தி பெற அவர் அருள் வேண்டி அனைவரும் பிரார்த்திப்போமாக! என்று அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-9)

## திருவள்ளுவர் விழா

யாழ்ப்பாணம், மார்ச் 16

அராலி சரஸ்வதி மகா வித்தியாலயத்தில் திருவள்ளுவர் விழா இன்று காலை 9-30 மணியளவில் வித்தியாலய அதிபர் திருமதி கோ. அம்பலவாணர் தலைமையில் இடம்பெறவிருக்கின்றது

மாணவர்களின் கையெழுத்துச் சஞ்சிகையான 'வள்ளுவம்' மூன்றாவது இதழை யாழ்ப்பாணக் கல்லூரியின் சிரேஷ்ட ஆசிரியரான க. சதாசிவம் வெளியிட்டு வைப்பார்.

பாடசாலை மட்டத்தில் நடத்தப்பட்ட திருக்குறள் மனனப்போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்குப் பரிசில்களும் வழங்கப்படும். (ஐ-3)

## கண்ணீர் அஞ்சலி

### அமரர் ஆறுமுகம் மகாலிங்கம்
(பிரதேச செயலர், வலி. தெற்கு. உடுவில்)

அன்னாரின் திடீர் மறைவு கேட்டு ஆறாத்துயர் அடைகின்றோம். அவரைப் பிரிந்து துயருறும் அவரது குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்கின்றோம்.

ஆத்மா சாந்தி அடைவதாக.

டாக்டர் நா. சண்முகராசாவும்
சக உத்தியோகத்தர்களும்.

மத்திய மருந்தகம்,
உடுவில். (85437)

## இதய அஞ்சலி

### ஆறுமுகம் மகாலிங்கம்
(முன்னாள் பதில் பிரதேச செயலர், வலி. தென். மேற்கு)

எமது கிராமத்திற்கு ஒரு பாடசாலை வேண்டும்
என்று கேட்டீர் ஐயா!
அதே பாடசாலையை நீங்களே திறந்து வைத்தீரையா!
100 வீட்டுத் திட்டத்திற்கு முதல் அத்திவாரக்கல்
நாட்டினீர் ஐயா!
எமது ஊரில் நித்திய பூசை இல்லா ஆலயங்களுக்கு
பூசைகள் நடத்த ஒழுங்குகள் செய்தீர் ஐயா!
1-5 வரை ஆரம்பப் பாடசாலை வேண்டுமென்று
திட்டங்கள் பல தீட்டினீர் ஐயா!
எல்லாவற்றையும் இடையில் விட்டு
எங்குச் சென்றீர் ஐயா!
தங்கள் குடும்பத்திற்கும் தமிழ்ச் சமுதாயத்திற்கும்
தங்கள் மறைவு பேரிழப்பு ஆகுமே ஐயா!

சாவல்கட்டு
100 வீட்டுப் பயனாளிகள்,
சாவல்கட்டு கடற்றொழிலாளர்
(85481) கூட்டுறவுச் சங்கம்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

கிளி. வேப்பொடுகேணி
சி.சி.த.க. பாடசாலை அதிபர்

### திரு. சின்னத்துரை இராமலிங்கம்
B.A (Cey ) Dip in Ed. SLPS 2-1

அவர்கள் இலங்கை அதிபர் சேவையின் 2-1 ற்கு பதவி உயர்வு பெற்றமையைப் பாராட்டி மேலும் பல பதவிகள் பெற்று வாழ புலோப்பளை அறத்தி அம்பாளை வேண்டி வாழ்த்துகின்றோம்.

பொ. பரமசாமி குடும்பத்தினர்.

புலோப்பளை,
பளை. (85439)

## நன்றியுடன் பாராட்டுகின்றோம்

எமது பாடசாலையின் கட்டடத் திருத்த வேலைகளுக்காக நிதி ஒதுக்கீடு செய்து உதவிய

வடக்கு புனர்வாழ்வு புனரமைப்பு,
வடக்கு—கிழக்கு தமிழ் விவகார
இந்து சமய கலாசார அமைச்சரான
**கௌரவ கே. என். டக்ளஸ் தேவானந்தா**
அவர்களுக்கும்

ஈ.பி.டி.பியின் யாழ் மாவட்ட பிரதான அமைப்பாளரும்,
நாடாளுமன்ற உறுப்பினருமான
**திரு. கே. வி. குகேந்திரன் (ஜெகன்)**
அவர்களுக்கும்

ஈ.பி.டி.பியின் யாழ் மாவட்ட பிரதி அமைப்பாளரும்,
நல்லூர்ப் பிரதேச சபைத் தலைவருமான
**திரு. க. மணிபல்லவராஜன் (நிஷாந்தன்)**
அவர்களுக்கும்

யாழ்ப்பாண அமைப்பாளர்
**திரு. து. இளங்கோ (றீகன்)**
அவர்களுக்கும்

யாழ். மாநகரசபை உறுப்பினர்
**திரு. மா. கனகரட்ணம்**
அவர்களுக்கும்

எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்து
வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
யா/கலட்டி மெதடிஸ்த மிஷன்
தமிழ்க் கலவன் பாடசாலை,
(85485) யாழ்ப்பாணம்.

# புலனாய்வுப் பிரிவுக்கு எதிராக
# அடிப்படை உரிமை மீறல் மனு

## களுத்துறைச் சிறையிலுள்ள மன்னார் வாசி தாக்கல்

கொழும்பு, மார்ச் 16

மன்னாரைச் சேர்ந்த இம்மானுவல்தேவதாசன் என்பவர் தன்னைக் காரணமின்றிக் கைது செய்து தடுப்புக் காவலில் வைத்திருப்பதாக பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவினருக்கெதிராக அடிப்படை மனித உரிமை மீறல் மனுவொன்றைத் தாக்கல் செய்துள்ளார்.

தற்போது களுத்துறைச் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இவர் தனது கைதும், தடுத்து வைப்பும் சட்ட விரோதம் என்று தெரிவித்து அடிப்படை மனித உரிமை மீறல் மனுவைத் தாக்கல் செய்துள்ளார்.

இம்மானுவல் தேவதாசன் 1999 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 19 ஆம் திகதி மன்னாரில் வைத்து பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவினரால் காரணம் எதுவும் கூறப்படாது கைது செய்யப்பட்டார்.

ஒரு குழந்தைக்குத் தந்தையான இவரை பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவினர் 1999 ஆம் ஆண்டு டிசெம்பர் 28 ஆம் திகதி கொழும்பு நீதிவான் முன்னிலையில் ஆஜர் செய்தனர் நீதிவான் விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

ஆனால் இதுவரை விசாரணைகளில் எவ்வித முன்னேற்றமும்இல்லாமல் இருப்பதோடு தன் மீது எவ்வித குற்றச்சாட்டுகளும் சுமத்தப்படாமல் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளதாக மனுதாரர் தெரிவித்திருக்கின்றார்.

மனுவில் பிரதிவாதிகளாகப் பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவின் பொறுப்பதிகாரி, பிரதி பொலீஸ் மா அதிபர், களுத்துறை சிறைச்சாலை அத்தியட்சகர், சட்டமா அதிபர் ஆகியோர் குறிப்பிடப்பட்டுள்ளனர். மனுவை சட்டத்தரணி க. ஞானசேகரம் நீதிமன்றத்தில் சமர்ப்பித்துள்ளார். (ஐ-190)

## அன்பளிப்பு

சுழிபுரம், மார்ச் 16

பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயத்திற்கு 50 ஆயிரம் ரூபா பெறுமதியான ஒலிபெருக்கித் தொகுதியை கல்லூரியின் பழைய மாணவனான தி. அருள்மாறன் அன்பளிப்புச் செய்துள்ளார். (க-28)

## கணனிப் பயிற்சி வகுப்புகள்

வடமராட்சி, மார்ச் 16

புலோலி கிழக்கு ஞானசம்பந்தர் கலைமன்றம் பாடசாலையை விட்டு விலகிய மாணவர்களுக்கெனக் கணனிப் பயிற்சி வகுப்பை ஆரம்பித்துள்ளது.

இப் பயிற்சி வகுப்புகளை நடத்தவெனப் புதிய கணனிகளையும் இந்த மன்றம் கொழும்பிலிருந்து தருவித்துள்ளது. (ம-173)

## விளையாட்டு உபகரணங்கள் அன்பளிப்பு

வலி. தென்மேற்கு, மார்ச் 16

மானிப்பாய் பிரதேச சபையினால் சனசமூக நிலையங்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

மானிப்பாய் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட 40 சனசமூக நிலையங்களுக்கே முதற்கட்டமாக இந்த உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. மிகுதி 36 சனசமூக நிலையங்களுக்கும் விரைவில் விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ம-185)

## ஆசிரியர்கள் தேவை

உடுவில், அளவெட்டி,
மல்லாகம்
ஆகிய இடங்களில்
**ஆண்டு 3-O/L வரை**
சகல பாடங்களுக்கும்
ஆசிரியர்கள் தேவை.
தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:-
சைன்,
உடுவில்,சுன்னாகம்.
(85499)

## கண்ணீர் அஞ்சலி

### ஆறுமுகம் மகாலிங்கம்
(வலி. தெற்கு, உடுவில் பிரதேச செயலர்-
பதில் பிரதேச செயலர்– நல்லூர்,
இந்து சமயப் பேரவை- உபதலைவர்)

அன்னாரின் மறைவுச் செய்தி அறிந்து அதிர்ச்சியும் மனவேதனையும் அடைகின்றோம். அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வேதபாராயண சனசமூக நிலையம்,
(85476) கோண்டாவில் மேற்கு.

## கண்ணீர் அஞ்சலி

### ஆறுமுகம் மகாலிங்கம்
(பதில் பிரதேச செயலர், நல்லூர்)

அவர்களின் திடீர் மறைவையொட்டி அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும், கண்ணீர் அஞ்சலிகளையும் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்,
யா/ முத்துத்தம்பி மகா வித்தியாலயம்,
(85475) திருநெல்வேலி.

## கண்ணீர் அஞ்சலி

### ஆறுமுகம் மகாலிங்கம்
(பிரதேச செயலர் - உடுவில்,
பதில் பிரதேச செயலர் – நல்லூர்)

அன்னாரின் திடீர் மரணச் செய்தி அறிந்து அதிர்ச்சியும் வேதனையும் அடைகின்றோம்.

அவரின் பிரிவால் துயரடைந்திருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலரும்,
நலன்புரிச்சங்க உத்தியோகத்தர்களும்,
ஊழியர்களும்.

பிரதேச செயலகம், வடமராட்சி வடக்கு,
பருத்தித்துறை. (85473)

## யாழ். இந்து ஆரம்ப பாடசாலை அபிவிருத்திச்சங்க வருடாந்த பொதுக்கூட்டம் 2001

மேற்படி பொதுக்கூட்டம் 25 - 03 - 2001
ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9-30 மணிக்கு
தலைவர்:- திரு. வே. ஞானகாந்தன்

அவர்களின் தலைமையில் முத்துக்குமாரு அரங்கில் நடைபெறும். நடப்பாண்டுக்கான புதிய நிர்வாக சபைத்தெரிவும் இடம்பெறும்.

பாடசாலையின் வளர்ச்சியைக் கருத்திற் கொண்டு அனைத்துப் பெற்றோர்களும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

✶ பிரேரணைகள் சமர்ப்பிக்க விரும்புவோர் 2001 - 03 - 22 இற்கு முன் செயலாளரிடம் சமர்ப்பிக்கவும்.

ச. சத்தியசீலன்
(செயலாளர்)

யாழ். இந்து ஆரம்ப பாடசாலை
யாழ்ப்பாணம். (85493)

# ஆயுத வர்த்தகத்தில் மோசடிகள்; ஜனாதிபதி விசாரணைக்கு உத்தரவு

## நாடாளுமன்றில் அமைச்சர் பட்டி வீரக்கோன் தெரிவிப்பு

கொழும்பு,மார்ச்16

படையினருக்கான ஆயுதக் கொள்வனவு விடயத்தில் ஊழல்கள் இடம்பெற்றிருப்பதாகத் தகவல் கிடைத்துள்ளது. இது குறித்து நாடாளுமன்றத் தெரிவுக்குழு விசாரணைகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

- இவ்வாறு நீதி அமைச்சர் பட்டி வீரக்கோன் நேற்று முன்தினம் நாடாளுமன்றில் இடம்பெற்ற வரவு-செலவுத் திட்ட விவாதத்தில் உரையாற்றும் போது தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'மோசடிகள் அற்ற ஆயுத வியாபாரம் இல்லை' என்று இந்தியத் தூதர் ஒருதடவை என்னிடம் தெரிவித்திருந்தார். ஆயுத வர்த்தகத்தில் மோசடிகள் இடம்பெற்றதாகத் தகவல் கிடைத்துள்ளது. லஞ்ச ஊழல் நடவடிக்கைகளை விசாரிக்கும் ஆணைக்குழுவின் விசாரணைகள் ஏமாற்றம் தருவதாக இருக்கின்றன.

ஆயுத மோசடி குறித்து விசாரணை நடத்துவதற்கு நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஒன்றுக்கு ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார் - என்று தெரிவித்தார்.

ஆயுத வர்த்தக மோசடியில் ஈடுபட்டோர் விவரங்களை வெளியிடுமாறு ஐ.தே.கட்சி எம்.பி. அஸ்வர் கோரிக்கை விடுத்தார்.

இதற்குப் பதிலளித்துப் பேசிய அமைச்சர் உயர்மட்ட நபர்களுக்கு இந்த விடயத்தில் தொடர்பு இருப்பதாகத் தெரிவித்தார். எனினும் பெயர்களைக் குறிப்பிடவில்லை. (ம)

# சமூகத்தில் அவலங்கள் நீங்க நாம் கரங் கொடுப்போம்

**17 ஆம் நாள்**

**தவக்காலச் சிந்தனை**

* அக்காலத்தில் வாழ்ந்த யூதத் தலைவர்கள் இறைவாக்கினரைக் கொன்றனர். அவர்கள் வழி வந்தவர்களோ மெசியாலை ஏற்காது வந்ததுடன் அவரை சிலுவையில் அறைந்து கொன்றனர். இது இஸ்ரேலியருக்கு அழிவைக் கொண்டு வந்தது. இறை அரசை அரவணைக்கும் அரும் பேற்றினை புற இனத்தார் பெறும் வாய்ப்புப் பெற்றனர்.

இறைவன் அழகிய உலகினை மானிடர் மேல் வைத்த அன்பினால் படைத்து அதனை ஆளவும் விருத்தி செய்யவும் ஒப்படைத்துள்ளார். நாம் திருச்சபையில் அங்கத்தினராகச் சேர்த்துக் கொள்ளப்பட்ட நாள் முதல் திருச்சபையின் புனித பணியின் பங்காளராக உண்மைக்கும் நீதிக்கும் குரல் கொடுப்பவர்களாக வாழப் பணிக்கப்படுகின்றோம்.

"கட்டுவோர் புறக்கணித்த கல்லே கட்டடத்திற்கு மூலைக்கல் ஆயிற்று. ஆண்டவரால் இது நிகழ்ந்துள்ளது; நம் கண்களுக்கு இது வியப்பாயிற்று

யேசு மத் 21:42

எம் மனமாற்றத்திற்காக மீண்டுமொரு இறைவனால் வழங்கப்பட்ட இப்புனித தவக்காலத்தை பயனுள்ளதாக்கி நம் சமூகத்தில் நிகழும் அவலங்கள் அகன்றிட கரங் கொடுப்போம்.

எம் சிலுவைகளை இன்முகத்துடன் சுமக்கும் இறைமகன் யேசுவின் சுமைகளை அகற்றுவோராக நம் அயலவரில் அவரைச் சந்தித்து வாழ்வதன் மூலம் வாழ்வின் நிறைவை அடைந்திட தொடர்ந்து முயன்றிடுவோம்.

- எஸ்.ஜீ.றூபவசந்தினி

## சேவைநலன் பாராட்டு விழா

யாழ்ப்பாணம்,மார்ச்16

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் கோப்பாய்க் கிளையின் முன்னாள் தலைவர் சு.முத்துக்குமாரசாமி, நிர்வாக உறுப்பினர் அருட்செல்வி எதில்வீவா ஆகியோருக்கான சேவை நலன் பாராட்டுவிழா எதிர்வரும் 19ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரியில் கோப்பாய் கிளைத் தலைவர் சோ.விஸ்வலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது. (ம-ரி)

# பக்தர்கள் குறைநீக்கி, அறிவு புகட்டி அற்புதங்கள் புரிந்தவர் விசிறி சுவாமியார்

**விசிறி சுவாமியார் என்று அழைக்கப்படும் யோகி ராம் சுரத்குமார் கடந்த மாதம் 19 ஆம் திகதி சமாதி நிலையை அடைந்தார். அவரது நினைவாக இக் கட்டுரை பிரசுரிக்கப்படுகின்றது.**

பக்தர்களும், சித்தர்களும் விரும்பி வாழுமிடம் திருவண்ணாமலை. ஞானிகளும்,முனிவர்களும் திருவண்ணாமலையை நாடிச் சென்று தவவாழ்வை மேற்கொண்ட காரணத்தால் அத்தலத்திற்கும், மலைக்கும் தனி மகிமை ஏற்பட்டுள்ளது.

விருபாட்ச தேவர், மகரிஷி ரமணர், சேஷாத்திரி சுவாமிகள், அருணகிரிநாதர் ஆகியோர் திருவண்ணாமலையில் தவம், தியானம், ஆலய வழிபாடு என்பவற்றை மேற்கொண்டு பல அற்புதச்செயல்களைச் செய்து தங்களை நாடி வரும் அடியார்களுக்கு அருள் பாலித்தனர்.

உலகிலேயே மிக தொன்மையான மலை இதுவென விஞ்ஞானிகளும் ஒப்புக்கொண்டுள்ளனர். டாக்டர் பீரால சகானி என்ற அறிஞரும் இக்கருத்தை தான் ஏற்றுக்கொள்வதாக விஞ்ஞானிகளின் மாநாட்டு ஒன்றில் தெரிவித்தார். பகவான் ரமணரை ஒரு பக்தர் தங்களுடைய குரு யார் என்று கேட்ட பொழுது குரு என்றால் மனித உருவில் தான் இருக்க வேண்டுமா? இந்த அருணாசலமலையே எனக்குக் குரு என்று கூறினார்.

இங்கு ஜமுனி,சண்முக யோகினி அம்மாள், அம்மணி அம்மாள் ஆகிய பெண்களும் தவவாழ்வு வாழ்ந்து சித்துக்கள் மூலம் அடியார்களைக் கவர்ந்துள்ளனர்.

விசிறி சுவாமியார் எனப்படும் யோகி

**ஞானக்கதிர்**

ராம்சுரத்குமார் ஓர் ஆசிரமத்தை அகரகாரக் கொல்லை, செங்கம்சாலை, திருவண்ணாமலையில் அமைத்து அருளாட்சி செய்து வந்தவர்.

உயர்ந்த சிவந்த மேனி, காவி உடை, உருத்திராக்க மாலை, தலையில் பச்சைத் தலைப்பாகை என்பன இவரின் அணிகலங்கள். கையில் சிரட்டை ஏந்தி அமுதம் வழங்குவதோடு கையில் விசிறியை அசைத்து ஆட்டிப் பொய்யை விலக்கிடும் புண்ணிய சீலன் அவர். ஆடியும், பாடியும திரியும் தெய்வக் குழந்தை என பக்தர்கள் இவரைப் போற்றினார்கள். பைத்தியம் என்று தன்னைக் கூறி வைத்தியம் செய்து அடியார்களின் தீராத நோய் தீர்த்தருளுவார். அவர் இருக்கும் இடத்தில் கிழிந்த பாய்களும், கோணிகளும், அழுக்குப் படிந்த துணிகளும் காணப்படும். அந்த இடத்திலே சுவாமிகள் விரும்பித்துயில் செய்து மகிழ்வார். திருவெண்ணாமலை தேரடியில்தான் சுவாமிகள் அதிகமாக காணப்படுவார்.

சிறுவயதில் ஏற்பட்ட ஒரு நிகழ்ச்சி சுவாமிகள் வாழ்க்கையை முற்றாக மாற்றிவிட்டது. ஒரு நாள்



தண்ணீர் எடுக்க கிணற்றடிக்குச் சென்ற சிறுவன் அங்கே ஒரு அழகிய குருவியைக் கண்டு விளையாட்டாக ஒரு கல்லை எடுத்து அதன் மீது எறிந்தான். விளையாட்டு விபரீதமாக முடிந்தது. குருவி சோர்ந்து நிலத்தில் விழுந்தது. சிறுவன் அதற்கு இரு துளி தண்ணீரை வாயில் விட்ட போதும் அதனைக் காப்பாற்ற முடியவில்லை.

இந்த நிகழ்ச்சி சிறுவனின் மனதில் ஒரு பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியது. மிக ஆழமாக சிந்தித்தான், தான் ஒரு பெரிய தவறு செய்து விட்டதாகக் கவலைப்பட்டான். என்னால் ஒரு குருவி இறந்துவிட்டதே என எண்ணி எண்ணி மனம் வருந்திய நிலையில் வீட்டை விட்டு வெளியேறினான். கன்னியாகுமரி முதல் இமயம் வரை தெருக்களிலும், மலைச்சாரல்களிலும் அடர்ந்த காடுகளிலும், திருக்கோயில்களிலும் நடமாடி ஆண்டிக் கோலத்தில் தாண்டவமூர்த்தியானான்.

ஸ்ரீ அரவிந்தரால் ஊக்கப் பெற்று ரமண மகரிஷியால் நயனதீட்சை அருளப்பட்டவர் யோகிராம் சுரத்குமார். ஆரவாரமும் தற்புகழ்ச்சியும் மிக்க இவ்வுலகில், தன்னை எந்த விதத்திலும் முன்னிலைப் படுத்தாது "நான் ஒரு பிச்சைக்காரன்" என்று பெருமையாகக் கூறி மக்களை நல்வழிப்படுத்தி ஆன்மீகத் துறையில் ஈடுபடச் செய்வதில் அவர் நிகரற்றவர்.

சாத்தனூர் என்ற கிராமத்தில் நீண்டகாலம் மழையின்மையால் விவசாயிகள் மிக கஷ்டப்பட்டனர். பட்டினிச் சாவை மக்கள் எதிர்நோக்கும் நிலை ஏற்பட்டது. விவசாயம் செய்யும் ஓர் இடத்தில் சுவாமிகள் உலாவிய பின் தனது இருப்பிடம் திரும்பினார். என்ன அதிசயம் அன்று மாலை நிலம் குளிர, மக்கள் மனம் மகிழ பெருமழை பெய்தது.

சுவாமிகள் அடியார்களுக்கு கூறுவது "அடிக்கடி என்னிடம் வரவேண்டிய அவசியம் இல்லை. கடமை முக்கியம். இருந்த இடத்திலிருந்து ஒரு முறை இந்தப் பிச்சைக்காரனின் பெயரைச் சொல்லு. அதுபோதும் அப்பா; அருள் கிடைக்கும்" என்றுதான்


*திருமதி மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம்*

மக்களுடைய துன்பங்களை நீக்கி அவர்களுடைய இந்த உலக வாழ்வை ஆன்மீகப் பாதையில் செலுத்த உதவுவதே சித்தர்களுடைய நோக்கமாகும்.

திருவண்ணாமலையில் தங்கி அடியார்களுக்கு தினமும் அருள் வழங்கி, பல அற்புதச் செயல்களைச் செய்து மக்களுடைய குறைகளை நீக்கி, அவர்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்து அறிவு புகட்டி, ஞான உணர்வை ஊட்டி, பசி தீர்த்து பல்லாண்டு வாழ்ந்த யோகி ராம் சுரத்குமார்.

மாசி மாதம் 7ஆம் நாள் திங்கட் கிழமை துவாதசி திதியில் சமாதியடைந்தார். அன்றும், இன்றும் என்றும் திருவண்ணாமலையில் அன்னாருடைய அருட்பிரவாகம் நிறைந்து காணப்படுகிறது. ✳

# தெய்வீக ஸ்தலங்களில்...



கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்மன் ஆலயத்தில் புதிதாக கட்டப்பட்ட கல்யாண மண்டபத் திறப்புவிழா அண்மையில் நடைபெற்றது.

கல்யாணமண்டபத்தை நல்லைஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பராமாசார்ய சுவாமிகள் சம்பிரதாய பூர்வமாகக் திறந்து வைப்பதை படத்தில் காணலாம்.

நல்லூர் உதவிப்பிரதேச செயலர் எஸ்.வேல்முருகோன்பிள்ளை, ஆலயபரிபாலன சபைத் தலைவர் து.வைத்திலிங்கம், கட்டடப் பகுதி நிறைவேற்றுப் பொறியிலாளர் எஸ்.சுந்தரகுமார் ஆகியோர் உடனிருப்பதையும் காணலாம். (ம-69)



அல்லையம்பதி சிவசுப்பிரமணிய தேவஸ்தானத்தில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் மேற்படி தேவஸ்தான பிரதமகுரு பிரம்ம ஸ்ரீ கெங்காதரக்குருக்களுக்கும் வல்லை சிவன் தேவஸ்தான பிரதமகுரு மனோகரக்குருக்கள், "சிவார்சார்ய குருதிலகம்" என்ற பட்டம் வழங்கி பொன்னாடை அணிவிப்பதையும் அருகில் வடமாராட்சியிலுள்ள பல சிவாச்சாரியர்கள் அமர்ந்திருப்பதையும், நிர்வாக சபை உறுப்பினர் க.அருட்செல்வம் உடனிருப்பதையும் படத்தில் காணலாம். (ம-109)



மருதானார் மடத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட ஸ்ரீ ஆஞ்சநேயர் ஆலயத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ள 9 அடி உயரமான ஆஞ்சநேயர் சிலைக்கென புதிதாக வெள்ளிக்கிரீடம் ஒன்று செய்யப்பட்டுள்ளது.

வெள்ளிக்கிரீடத்துடன் ஆலயக்குருக்களும் ஏனையோரும் நிற்பதைப் படத்தில் காணலாம். (ம)



அராலி ஆவரம்பிட்டி ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயத்துக்கு புதிய வசந்த மண்டபம் அமைப்பதற்கான அடிக்கல் நடும் வைபவம் அண்மையில் இடம்பெற்றது.

வலி.மேற்கு பிரதேச சபைத் தலைவர் ந.திரிலோகநாதன் அடிக்கல்லை நட்டு வைக்கின்றார். சிற்பாச்சாரியார் எஸ்.தம்பிராசா அருகில் காணப்படுகிறார். (ம-175)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

### திரு. சதாசிவம் ஞானலிங்கம்

(அதிபர், யாழ்.மறவன்புலோ சகலகலாவல்லி வித்தியாலயம்)

கைதடி சித்த போதனா வைத்தியசாலையின்
வைத்திய உத்தியோகத்தர்
**திருமதி விஜயலட்சுமி ஞானலிங்கம்** அவர்களின்
கணவரும் சிறந்த சமூகத் தொண்டனுமாகிய இவர் அகில
இலங்கை சமாதான நீதிவானாகப் பதவியேற்றதையிட்டு
எங்கள் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**வைத்திய பொறுப்பதிகாரியும்,**
**வைத்திய உத்தியோகத்தரும்,**
**பணியாளர்களும்.**

(85480)

## கண்ணீர் அஞ்சலி



### ஆறுமுகம் மகாலிங்கம்

B.A., S.L.A.S.

(பிரதேச செயலர் - உடுவில், பதில் பிரதேச செயலர்-நல்லூர்)

அன்னாரின் மரணச்செய்தி கேட்டு அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தோம். எங்கள் சங்கத்திற்கு வேண்டிய ஆலோசனைகளை வழங்கியமையை நினைவு கூர்ந்து, பிரிவால் வாடும் குடும்பத்தாரின் துயரில் பங்குகொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ்.மாவட்ட கிராமஅலுவலர்
நலன்புரிச்சங்கம்.

வீ.வேலாயுதசெயோன்
தலைவர்.

**இ.அ.மகாலிங்கம்**
செயலாளர்.

(85464)

## விழி நீர் சொரிகின்றோம்

எமது அன்புக்கும் பெருமதிப்புக்குமுரிய

### ஆறுமுகம் மகாலிங்கம்

**(பிரதேச செயலர், உடுவில்-பதில்பிரதேச செயலர், நல்லூர்)**

1995இல் இடம்பெயர்ந்த பொழுது சாவகச்சேரி வலய மேலதிக அரசாங்க அதிபராக இருந்து எம்மையெல்லாம் மனித நேயத்துடன் அரவணைத்து ஆக்கமும் ஒத்துழைப்பும் தந்த அவரது திடீர் மறைவு எமக்கு ஆறாத்துயரத்தைத் தருகிறது. அவரது குடும்பத்துக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

*கிராம அலுவலர்கள்:-*
தே.பாலச்சந்திரன் கரம்பொன் J/51
இ.சிறிஸ்கந்தராசா நாரந்தனை J/57
இ.திருப்புகழூர்சிங்கம் காரைநகர்
வடகிழக்கு J/47

(85470)

## ஆத்மார்த்த இதய அஞ்சலி



உடுவில் பிரதேச செயலாளரும்
யாழ். இந்து சமயப் பேரவையின் உபதலைவருமான

### ஆறுமுகம் மகாலிங்கம்

அவர்கள் இறைபதம் அடைந்த செய்திகேட்டு அதிர்ச்சியும் வேதனையும் ஆழ்ந்த கவலையும் அடைகிறோம்.

கடந்த 25 ஆண்டுகளாக எமது கழகத்துக்கு அளப்பருஞ் சேவையாற்றி, அதன் வளர்ச்சிக்கு உழைத்த மகாலிங்கம் ஐயா அவர்களை எம்மால் மறக்கவே முடியாது. அவரது இழப்பு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.

**திரு. சி. நடராஜா,**
செயலாளர்,
றோயல் விளையாட்டுக் கழகம்,
*புகையிரத நிலைய வீதி, சுன்னாகம்.*

(85465)

## விந்துனுவெவ முகாம் படுகொலைகள்:

# 3 மாதத்துக்குள் அறிக்கை கோருகிறார் ஜனாதிபதி

யாழ்ப்பாணம்,மார்ச்16

விந்துனுவெவ புனர்வாழ்வு முகாமில் இடம்பெற்ற படுகொலைகள் தொடர்பாக பூரண விசாரணைகளை நடத்தி மூன்று மாத காலத்துக்குள் அறிக்கை சமர்ப்பிக்குமாறு மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி பீ.எச்.கே.குலதிலகாவுக்கு ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க உத்தரவிட்டுள்ளார்.

விந்துனுவெவ புனர்வாழ்வு முகாமில் படுகொலை செய்யப்பட்டமை மற்றும் காயப்படுத்தப்பட்டமைக்கு நேரடியாக அல்லது மறைமுகமாக பொறுப்பானவர்களைக் கண்டறியவும், இதன்போது நிர்வாகமும் பொதுச் சேவை உத்தியோகத்தர்களும் நடந்துகொண்ட முறை பற்றியும் இந்தத் தனிநபர் ஆணைக்குழு ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கும்.

இவ்வாறான சம்பவங்கள் மீண்டும் இடம் பெறுவதைத் தடுப்பதற்கும் இடம்பெற்றால் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் பற்றியும் இக்குழு தனது பரிந்துரைகளைச் சமர்ப்பிக்கும். (க-9)

### கட்டடம் சேதம்

யாழ்ப்பாணம்,மார்ச்16

கைதடிப் பகுதியில் இடம்பெற்ற அனர்த்தங்களினால் கைதடி மத்தி வளர்மதி சனசமூக நிலையக் கட்டடம் பெரும் சேதமடைந்துள்ளது.

அண்மையில் இப்பகுதிக்குச் சென்ற மேற்படி சனசமூக நிலைய நிர்வாகிகள் இக்கட்டட சேதத்தைப் பார்வையிட்டுவந்தனர். (க-5)

### ஊர்காவற்றுறையில் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை

காரைநகர்,மார்ச்16

ஊர்காவற்றுறை அரசினர் வைத்தியசாலைக் காணியில் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை அமைக்கப்பட உள்ளது.

இந்தப் பணிமனையை அமைப்பதற்காக வடக்கு அபிவிருத்தி புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சினால் 25 லட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. (க-73)

### சுகாதாரக்குழுக் கூட்டம் இன்று

யாழ்ப்பாணம்,மார்ச்16

யாழ்மாநகரசபை சுகாதாரக் குழுவின் விசேட கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை காலை 10.30 மணியளவில் யாழ்.மாநகரசபை அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

சுகாதாரக் குழுவின் தலைவர் செல்லையா விஜயரட்ணம் தலைமையில் நடைபெறும் இக் கூட்டத்தில் முக்கிய விடயங்கள்பற்றி ஆரயப்படவுள்ளன. (க-5)

### பொலிஸ்காரனின் சைக்கிளைத் திருடிய 'பலே' ஆசாமி

நெல்லியடி,மார்ச்16

பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவரின் சைக்கிளைப் பட்டப்பகலில் அபகரித்துச் சென்றதாகக் கூறப்படும் இளைஞர் ஒருவர் துன்னாலைப் பகுதியில் வைத்து மடக்கிப் பிடிக்கப்பட்டார். திருடப்பட்ட சைக்கிள் நெல்லியடி வர்த்தகர்களினால் மீட்கப்பட்டது.

இந்தச் சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

நெல்லியடி பொலீஸ் நிலையத்தைச் சேர்ந்த கான்ஸ்டபிள் ஒருவரின் சைக்கிளே இவ்விதம் திருடப்பட்டு பின்னர் மீட்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

சந்தேகநபர் தற்பொழுது தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார். (ம-109)

**I.B.S.** கல்வி நிறுவனம்

தரம் 5 புலமைப்பரிசில்
பரீட்சையில் கூடிய
புள்ளிகளைப் பெற்றவர்கள்.

C.V. ஜோன்கலிஸ்ரஸ்
M.யூடிற்ரா
D.சதீஸ்
V. பிரணவன்
S.ரேணுகா
இ.சஜீவரன்

(84484)

அடுத்த பரீட்சை
ஞாயிறு 1.00 P.M.

### இளைஞர் கழக சம்மேளனக் கூட்டம்

கோப்பாய் பிரதேச இளைஞர் கழக சம்மேளனக் கூட்டம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பகல் 11.00 மணிக்கு நடைபெற உள்ளது.

எதிர்வரும் 25ஆம், 26ஆம் திகதிகளில் இளைஞர் கழக விளையாட்டுப் போட்டிகள் ஆரம்பிக்கப்பட இருப்பதால் பங்குபற்ற விரும்பும் கழகங்கள் அதற்கான படிவங்களைப் பூர்த்தி செய்து அன்றைய தினம் சமர்ப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. அதற்குப் பின்னர் கிடைக்கும் படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## இனிய வாழ்த்துக்கள்



உயர்திரு.
### க.தேவராஜா
வணிகத்துறைத் தலைவர்,
யாழ்.பல்கலைக்கழகம்.

மார்ச் 10இல் பொன்விழாக்கண்ட எமது உறவினர் தேவா தம்பதியினரை மனதார வாழ்த்துகின்றோம்.

பொன் விழாக் கண்ட
பொன் மனச் செம்மலே!
நின் விழாவதை
மண்ணவர் விண்டனர்
விண்ணவர் கண்டனர்

வள்ளுவர் வகுத்த நெறி
வாழ்ந்து காட்டலால்
நின்குண மொளிருதே
குன்றினில் விளக் கென

மனங்களை வெல்வது
நின் மாய வித்தையோ?
மானுடம் ஜெயித்ததே
மண்ணுலகு மகிழ்ந்ததே!

*வேலணை கிழக்கு* பண்டிதர் பொ.ஜெகநாதன்,
மக்கள், மருமக்கள் சார்பில்
திரு.செ.சண்முகலிங்கம், திருமதி ச.பொன்மதி B.A.

(85471)

## குதூகல ஆரம்பம்

### C.L.S. புத்தகசாலை

மீண்டும் யாழ்நகரில், பிரசித்தி பெற்ற C.L.S. கிறிஸ்தவ புத்தகசாலை, மக்கள் தேவை கருதி, அனேகரின் வேண்டுகோளுக்கு இணங்க, வைத்திய சாலை வீதியில் (சம்மந்தன் கிளினிக்கருகில்) 12-03-2001 முதல், இயங்குகின்றது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

இங்கே, உங்களுக்குத் தேவையான கிறிஸ்தவ நூல்கள், சகல கிறிஸ்தவப் பாடல் கசெட்டுகள், பாடசாலை உபகரணங்கள், காகிதாதிகள், ஸ்டிக்கர் வகைகள், கீடேக் வகைகள் என்பவற்றை குறைந்த விலையில் பெற்றிட இன்றே நாடுங்கள்!

குறைந்த விலை......... நிறைந்த மனம்.......

இன்றே நாடுங்கள்,
**C.L.S. புத்தகசாலை. யாழ்ப்பாணம்.**

(C/15740)

## அமரருக்கு அஞ்சலி



உடுவில் பிரதேச செயலரும்,
யாழ். இந்து சமயப் பேரவையின் உபதலைவருமான

### ஆறுமுகம் மகாலிங்கம் அவர்கள்

சிவபதமடைந்த செய்தி கேட்டுத் துணுக்குற்றோம். சுன்னாகம் பூபாலகிருஷ்ணா ஆச்சிரமத்தையும் வழிபாட்டு மண்டபத்தையும் திறந்து வைத்து இந்துசமயம் மேலோங்க ஆசீர்வதித்த பயன்களை நாங்கள் அனுபவிக்கின்றோம். இந்த வேளையில் சுவாமி பிரேமானந்த மகரஷியின் பக்தர்களைத் தவிக்க விட்டு அவர் பிரிந்தது, எம்மை ஆறாத்துயரத்தில் ஆழ்த்தி விட்டது. சேவை தான் கடவுள்!

அன்னாரது ஆத்மா சாந்தி பெறப் பிரார்த்திக்கின்றோம்.

திருமதி பாக்கியலட்சுமி நடராஜா
வடமாநில ஒருங்கிணைப்பாளர்,
தி.மா.செல்வராஜா ஜே.பி.
முன்னாள் பிரதேச சபைத் தலைவர்,
வலிகாமம் தெற்கு, சுன்னாகம்.

**சி.நடராஜா**
*பூபாலகிருஷ்ணா ஆச்சிரமம்,*
*காங்கேசன் துறை வீதி,*
*சுன்னாகம்.*

(85466)

# 31 ஆம் நாள் நினைவுப் பூக்கள்



அன்னை மடியில் 13 - 02 - 1924

ஆண்டவன் அடியில் 14 - 02 - 2001

அமரர்

## இராசம்மா செல்லத்துரை

திங்கள் ஒன்று சென்றாலும்
தீயில் நீங்கள் வெந்தாலும்
நெஞ்சம் மறக்குமா உங்கள் நினைவுகளை?
நீங்கள் காட்டிய பாசத்தை அன்பு நேசத்தை - எம்
இதய தந்திகள் தினம் தினம் மீட்டும்!

*ஆலடி வீதி,*
*கோண்டாவில் கிழக்கு,*
*கோண்டாவில்.*

- குடும்பத்தினர்.

(85341)

# பதவி உறுதிப்படுத்தற் கடிதங்கள்

யாழ்ப்பாணம்,மார்ச்16

தீவகக் கல்வி வலயப் பாடசாலைகளில் 3 வருடங்கள் தொடர் சேவை ஆற்றிய ஆசிரியர்களுக்கான பதவி உறுதிப்படுத்தற் கடிதங்கள் மேலதிக மாகாணக் கல்விப் பணிமனையால் விரைவில் அனுப்பி வைக்கப்படவுள்ளன. (ம-10)

# முன்பள்ளி மாணவர்களுக்கு பால்மா

ஊர்காவற்றுறை,மார்ச்16

ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட மூன்று முன்பள்ளி நிலையங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு இலவசமாக பால்மா பைக்கற்றுக்களை 'கியூடெக்' நிறுவனம் இலவசமாக வழங்க உள்ளதாக பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் இ. குமாரசாமி சர்மா தெரிவித்தார். (ம-16)

# ஜேர்மனியில் தமிழர்கள் போராட்டம்

பொன்,மார்ச்16

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஜேர்மனியில் தங்கியுள்ள இந்தவேளையில் ஜேர்மன் வாழ் ஈழத் தமிழர்கள் சுழற்சி முறையிலான விழிப்புப் பேராட்டம் ஒன்றை செவ்வாய்க்கிழமை முதல் ஆரம்பித்துள்ளனர்.

ஜேர்மனின் பிறீமன் நகரில் இந்தப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

. மனித உரிமை மீறப்படும் சம்பவங்கள் இலங்கையில் அதிகரித்து வருகிறது. இந்தச் சமயத்தில் ஈழத் தமிழர்கள் இலங்கைக்குத் திருப்பி அனுப்பக் கூடாது எனக் கோரியே இந்தப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக ஏற்பாட்டாளர்கள் சார்பில் தெரிவிக்கப்பட்டது.

அண்மைக்காலமாக ஜேர்மனி ஈழத்தமிழர்களுக்கு அரசியல் தஞ்சம் வழங்க மறுத்து வருவது தெரிந்ததே. (ஐ-7)

# பாராட்டி வாழ்த்துகிறோம்

டாக்டர்

## செல்லத்துரை பரமசிவம்பிள்ளை

கைதடி சித்த போதனா வைத்தியசாலையின் முன்னாள் வைத்திய உத்தியோகத்தரும், வலிகாமம் மேற்கு பிரதேச சபை சித்த ஆயுர்வேத வைத்திய பொறுப்பதிகாரியும், சிறந்த சமூகத் தொண்டனுமாகிய இவர், அகில இலங்கைச் சமாதான நீதிவானாகப் பதவியேற்றதையிட்டு எங்கள் நல்வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறோம்.

வைத்தியப் பொறுப்பதிகாரியும்,
வைத்திய உத்தியோகத்தர்களும்,
பணியாளர்களும்.

(85479)

# கண்ணீர் அஞ்சலி

## அமரர் ஆ. மகாலிங்கம்

(பிரதேச செயலர், உடுவில் - பதில் பிரதேச செயலர்-நல்லூர்)

மரணம் நியதியெனினும் மக்கள் தொண்டன் ***ஆ.மகாலிங்கம்*** அவர்களது மறைவு வேதனையானது. அன்னாரின் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தி பெறப் பிரார்த்திக்கின்றோம்.

**யாழ்.உதவி விவசாயப் பணிப்பாளரும்**
**ஏனைய உத்தியோகத்தர்களும்**
**தொழிலாளர்களும்.**

*நலன்புரிச்சங்கம்*
*விவசாயத்திணைக்களம்,யாழ்ப்பாணம்.*

(85457)

யா/ கொக்குவில் மேற்கு சி.சி.த.க.பாடசாலையும்
யா/ கொக்குவில் ஸ்தான சி.சி.த.க.பாடசாலையும்
இணைந்து நடத்தும்

# இல்ல மெய்வல்லுனர் போட்டி-2001

**காலம்** : இன்று (16-03-2001) வெள்ளிக்கிழமை பி.ப.2.00 (இல.நேரம்)
**இடம்** : கொக்குவில் மேற்கு கிராம மு.ச.மைதானம்.
**தலைவர்கள்** : திரு.நா.ஜெயனொளிபவன் (அதிபர்), திருமதி ம.வேதநாதன் (அதிபர்)
**பிரதமவிருந்தினர்** : திருமதி செ.மகாலிங்கம் (கல்விப் பணிப்பாளர்-யாழ்.வலயம்)
**சிறப்பு விருந்தினர்கள்**: திரு.மு.ஜெயக்குமார் (அதிபர்,தொல்புரம் விக்னேஸ்வரா வித்தியாலயம்), லயன் இ.செல்வநாதன் (சமாதான நீதிவான்)
**கௌரவ விருந்தினர்** : திரு.த.அழகரத்தினம் (இளைப்பாறிய அதிபர்)

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்**

*கொக்குவில்.*

**அதிபர்,ஆசிரியர்கள்,பெற்றோர்**
**மாணவர்கள்.**

(85445)

*விளம்பர அன்பளிப்பு:-*

## நதி வாச் அன் றேடியோ

**105, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

# நன்றி நவில்கின்றேன்

செல்வி தனீஸ்கரன் சாமினி ஆகிய நான் நேற்று முன்தினம் (14-03-2001) புதனன்று பொருள்கள் வாங்குவதற்காக யாழ்.சித்தி விநாயகர் களஞ்சியத்துக்குச் சென்று திரும்பியவேளை பெறுமதிமிக்க பொருள்களுடன் (BAG) பை ஒன்றைத் தவறவிட்டுவிட்டேன். அதனை எங்கும் தேடிக் காணத பட்சத்தில் கவலையுடன் வந்தபோது, அக்களஞ்சியத்தில் கடமையாற்று கின்றவரான **க.ஆனந்தன்** என்பவர் என்னை அழைத்து அந்தப் பெறுமதிமிக்க பொருள்களடங்கிய பையை என்னிடம் ஒப்படைத்தார். என் மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. அவரது பெருந்தன்மையைப் பாராட்டி நான் அவருக்கு நன்றி கூறுகின்றேன்.

தகவல்: செல்வி தனீஸ்கரன் சாமினி. (85455)

# UNIVERSITY OF JAFFNA

## TENDER NOTICE

The Chairman, Tender Board, University of Jaffna will receive sealed tenders from contractors registered with (ICTAD) for Civil Engineering works or from Multi Purpose Co-operative Socities for the Construction of Basket Ball Court at Sports Complex Unit, University of Jaffna.

Tender forms may be obtained from the works Engineer (Civil), University of Jaffna until 26-03-2001 on producing Registration book and receipt for the cash payment for the following tender fees at the Shroff's counter of University of Jaffna.

1. Refundable deposit Rs. 4500/-
2. Non - refundable deposit Rs 500/-

Perfected tenders to be sent to reach the Chairman, Tender Board, University of Jaffna or deposited in the tender box kept at the Registrar's office, University of Jaffna on or before 05-04-2001 at 10.00 a.m.

Tender forms may be inspected by the tenders free of charge at the Maintenance Branch of this University during office hours if necessary.

**Registrar,**
**University of Jaffna.**

*P.O.Box 57,*
*Thirunelvely,*
*Jaffna.*

(சி15733)

# திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் சர்வமங்களகரமான விக்கிரம வருடம், பங்குனி மாதம் 18ஆம் நாள் (31-03-2001) சனிக்கிழமை, பூர்வபட்ஷஸப்தமி திதியும், மிருகசீரிஷ நட்சத்திரமும் சித்தயோகமும் கூடிய சுபயோக சுபதினத்தில் பகல் 11.00 மணிக்கு மேல் 1.00 மணிக்குள் வரும் கடக லக்ன சுபமுகூர்த்த வேளையில்

*எமது புதல்வன்*
*திருநிறை செல்வன்*
**செந்தூரன்**
*அவர்களுக்கும*



*எமது புதல்வி*
*திருநிறை செல்வி*
**அஞ்சனா**
*அவர்களுக்கும்*

தெய்வத் திருவருளை முன்னிட்டு மாங்கல்யதாரணம் நடத்தும் பொருட்டு பெரியோர் களால் நிச்சயிக்கப் பெற்று மேற்படி வைபவம் இலண்டன் சிவன் கோயில் திருமண மண்டபத்தில் (4A, CLORENDON RISE, LEWISHAM, LONDON SE - 13 - 5ES) நடைபெறும் என்பதை மகிழ்ச்சியுடன் எமது சுற்றத்தவர்களுக்கும் உறவினர், நண்பர்களுக்கும் அறியத்தருகின்றோம்.

**திருமதி&திரு. V. சோமநாதன்**
*'குமரன் இல்லம்'*
*உரும்பிராய் வடக்கு,*
*உரும்பிராய்.*

**திருமதி&திரு. R. நடராஜா,**
*'சிவகிரி'*
*உரும்பிராய் கிழக்கு,*
*உரும்பிராய்.*

MR.&MRS.V.SOMANATHAN,
21,CAMERON SQUARE,
MITCHAM, SURRAEY CR4 3SH.

MR.&MRS.R.NADARAJAH,
46,CORNMILL LANE,
LEWISHAM, LONDON SEB 7BL.

**MR. & MRS.V.KRISHANAKUMAR**
HILL CROSS AVENUE, MORDEN, SURREY SM4 4EA

(இது விட்டார் அழைப்பு)

(85418)

## தேவை

### OFF - SET PRINTING MACHINE OPERATORS

முன் அனுபவம் உடைய ஒவ்-செற்(OFF - SET) இயந்திர இயக்குநர்கள் மூவர் தேவை. முன் அனுபவம் உடையவர்கள் மட்டும் விண்ணப்பிக்கவும். பெயர், முகவரி, பிறந்த திகதி, முன் அனுபவ விவரம், எதிர்பார்க்கும் வேதனம் ஆகிய விவரங்கள் விண்ணப்பத்தில் இடம்பெறுதல் விரும்பத்தக்கது. பகுதிநேர அல்லது ஒப்பந்த அடிப்படையில் (PIECE WORK RATE) பணியாற்ற விரும்புபவர்களும் விண்ணப்பிக்கலாம்.

**விண்ணப்ப முடிவு திகதி : 25-03-2001**

**விளம்பர இல. 1238, மே/பா உதயன்,**
***கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.*** (C/15664)

## நீங்காத நினைவலையில்
## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 28 - 03 - 1927



மறைவு 07 - 04 - 1999

### அமரர் சரவணமுத்து சோமசுந்தரம்

*(கிராம சேவை உத்தியோகத்தரும் ஆவரங்கால் சிவன் கோயில் தர்மகர்த்தா சபைத் தலைவரும்)*

**திதி: 16.03.2001 வெள்ளிக்கிழமை**

**இல்லத்தின் விளக்காக எமக்கெல்லாம் துணையாக**
**இருந்த நீங்கள்**
**எல்லார்க்கும் நல்லவராய் இலட்சியத்தின் இலக்கணமாய்**
**எழுந்த நீங்கள்**
**நல்லார்க்கும் அல்லார்க்கும் நலங்கூறும் தலைவருமாய்**
**நடந்த நீங்கள்**
**சொல்லாக ஓவியமாய், சுடர் வீசும் மறை பொருளாய்**
**இன்னும் உள்ளீர்**
**ஐயாவென்றுமை யழைத்தும் காணாத கண்கள் தான்**
**நனையக் காண்பார்**
**பொய்யாத எமதுள்ளத்தில் பூவாக மலர்ந்திருத்தல்**
**யாரும் காணார்!**

க.இராசதுரை,
*சிவன் வீதி,*
*ஆவரங்கால்.* (85386)

**மக்கள்,**
**மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**

## பழத் தொழிற்சாலைக் கட்டடம் சேதம்

தென்மராட்சி,மார்ச்16

சாவகச்சேரி ப.நோ.கூ..சங்கத்தினர் பட்டினி ஒழிப்பு இயக்கத்தின் அனுசரணையுடன் ஆரம்பிக்கப்படவிருந்த பழத் தொழிற்சாலையின் கட்டடம் சேதங்களுக்கு இலக்காகி காணப்படுவதாக அங்கு சென்று திரும்பிய சங்கப் பொது முகாமையாளர் சி.தேவகுமார் தெரிவித்தார்.

இந்தக் கட்டடம் 5 லட்சம் ரூபா செலவில் அண்மையிலேயே புனரமைக்கப்பட்டிருந்தது என்றும் அவர் கூறினார்.

பழத் தொழிற்சாலைக்கென கொழும்பிலிருந்து தருவிக்கப்பட்ட இயந்திரங்கள் திருநெல்வேலி விவசாயப் பண்ணையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் சொன்னார். (க-117)

## இலவச வகுப்பு

தென்மராட்சி,மார்ச்16

ஜி.சீ.ஈ சாதாரண தரப் பரீட்சையில் சித்திபெறாது பாடசாலையை விட்டு வெளியேறிய மாணவர்களுக்கு எதிர்வரும் டிசம்பர் மாதம் நடைபெறவுள்ள பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக்கொள்வதற்காக இலவச வகுப்புக்களை கட்டைவேலி நெல்லியடி ப.நோ.கூ சங்கத்தினர் நடத்திவருகின்றனர்.

முதற் கட்டமாக சங்கத்தினால் நடத்தப்படும் தையல் பயிற்சி வகுப்பு, மனைப்பொருளியல் வகுப்பு அலுவலக பயிலுநர்கள் ஆகியோருக்கு இலவச வகுப்புகள் நடத்தப்பட்டு வருவதாக சங்கத் தலைவர் த.சிதம்பரப்பிள்ளை தெரிவித்தார். (க-117)

## இளைஞர் விடுவிப்பு

யாழ்ப்பாணம்,மார்ச்16

சுண்டிக்குழிப் பகுதியில் வைத்து கடந்த 9 ஆம் திகதி படையினரால் கைது செய்யப்பட்ட இளைஞர் விசாரணைகளின் பின்பு நேற்று முன்தினம் விடுதலை செய்யப்பட்டுள்ளார் என்று மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ்.அலுவலகத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாண்டியன்தாழ்வு, சுண்டிக்குழியைச் சேர்ந்த நல்லையா நவநிலவன்(வயது28) என்பவரே நேற்று முன்தினம் பகல் 12 மணியளவில் கிராம அலுவலர் முன்னிலையில் படையினரால் விடுதலை செய்யப்பட்டவராவார்.

இவருடன் சேர்த்து கைது செய்யப்பட்ட இருவரும் ஏற்கனவே விடுதலை செய்யப்பட்டுவிட்டதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின யாழ்.அலுவலக அதிகாரி தெரிவித்தார். (ம-10-9)

## வாழ்த்துகின்றோம்

**மார்ச் 17இல் பொன்விழாக் கொண்டாடும்**

*திரு. பொ. நவரத்தினம்*
(இளைப்பாறிய எழுதுவினைஞர், நீர்ப்பாசனத் திணைக்களம் மகா இலுப்பலம)

*திருமதி கோமதி அம்மா நவரத்தினம்*
(இளைப்பாறிய ஆங்கில ஆசிரியை, சாவகச்சேரி இந்துக் கல்லூரி)

தம்பதியினரை நீடூழி வாழ்கவென
வாழ்த்துகிறோம்.

மருமகள்
**திருமதி குணேஸ்வரி மகேந்திரன்,**
மருமகள்
**திருமதி கிருஷாந்தி விஜயகாண்டீபன்,**
மருமகன்
கு.சிறீதரன்.

*கல்லூரி ஒழுங்கை,*
*உடுப்பிராய் வடக்கு,*
*உடுப்பிராய்.* (85364)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



### திரு. பெரியதம்பி கனகரத்தினம்

**சங்கானை ப.நோ.கூ.சங்கத்தில் பணியாளராக 35 வருடகாலம் சேவையாற்றி இறுதியாக மேற்படி சங்கத்தின் பொது முகாமையாளராக இருந்து கடந்த 05-03-2001 திங்கட்கிழமை இளைப்பாறியவரான**

திரு.பெரியதம்பி கனகரத்தினம்

**அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்**

பொதுமுகாமையாளராக இருந்து சங்கத்தின் வளர்ச்சிக்காக உழைத்து சேவை புரிந்தது மட்டுமன்றி கூட்டுறவு ஊழியர் தொழிற் சங்கத்தின் தலைவராகவும் இருந்து பணியாளர்களின் உரிமைக்காக குரல் கொடுத்த ஓர் உத்தமராவார். இவரது சேவையைப் பாராட்டி வாழ்த்துவதோடு இவர் சேவையானது மேன்மேலும் வளர்ச்சியுற்று குடும்பச் சிறப்புடன் வாழ இறைவனை வேண்டி மகிழ்கின்றோம்.

*ப.நோ.கூ.சங்கம்,*
*சங்கானை* (85434)

**கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கம்,**
**கிளை - சங்கானை.**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணுலகில் 26 - 11 - 1926



விண்ணுலகில் 28 - 03 - 2000

### அமரர் வேலுப்பிள்ளை நடராசா

(இளைப்பாறிய ஆசிரியர், சாவகச்சேரி இந்துக் கல்லூரி)

**திதி: 2001-03-17**

தேசிய உடை அணிந்த முதுதமிழ் ஆசானாய்
மாசிலாக் கல்விப் பணி புரிந்தீர்! மகிழ்வுடன்
பல்லாண்டு கசிந்த எம் திறன்களைக்
கங்கை போல் பெருக வைத்தீர்!
பேசினிக்கினிய பெருமானின் திருக்கழல்கள்
வாசியாகி நின் ஆன்மா சாந்தியடைகவென
பூசிக்கின்றோம் பக்தியுடன்
புனிதனே! அடைக சாந்தி!

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

*"உதயபானு"*
*கண்டி வீதி,*
*கொடிகாமம்.* (85393)

அன்பு மனைவி,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரர்.




**இலகுவானது, பாதுகாப்பானது, பயனுள்ளது, பேன்களுக்கெதிரான நிவாரணி.**
***வாரம் ஒரு தடவை*** **தொடர்ந்து பாவித்துவரின் உங்களினதும் பிள்ளைகளினதும் கேசத்தில்** ***பேன்களையும் ஈருகளையும்*** **முற்றாக இல்லாதொழிக்கும்.**
**தற்போது 10ml, 50ml அளவுகளில் எங்கும் கிடைக்கும்.**

**Hemas Marketing (pvt) Ltd. ஊடாக விநியோகிப்பவர்கள்:**

***றூபா பன்முக வர்த்தகம்***

**104A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.**

(சி15511)

### யாழ்.ஆஸ்பத்திரியில் இருந்து

# பண்ணைக் கடலுக்குச் செல்லும் கழிவுநீர் கசிவைக் கட்டுப்படுத்த நடவடிக்கை

## திருத்த வேலை செய்ய முன் வருவாரில்லை

யாழ்ப்பாணம்,மார்ச்16

யாழ்.போதனா வைத்தியசாலையில் இருந்து பண்ணைக் கடலுக்குச் செல்லும் கழிவுநீர் குழாயில் ஏற்பட்டுள்ள கசிவைத் தற்காலிகமாகத் தடுத்து நிறுத்திக் கட்டுப்படுத்துவதற்கு வைத்தியசாலை நிர்வாகத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வைத்தியசாலைக்கு முன்பாக நகரின் மத்தியில் நிலத்துக்குக் கீழ் செல்லும் இந்தக் குழாய் நீர்க் கசிவினால் அந்தப் பகுதியில் துர்நாற்றம் வீசத் தொடங்கியது குறித்தும் இதனால் ஏற்படும் சுகாதாரப் பாதிப்புக் குறித்தும் சுட்டிக்காட்டப்பட்டதைத் தொடர்ந்தே மேற்படி நடவடிக்கை எடுக்கப்பட்டது.

கழிவுநீர் கசியும் பகுதியை யாழ்.போதனா வைத்தியசாலை அதிகாரிகள் குழு ஒன்று கடந்த செவ்வாய்க்கிழமை நேரில் சென்று பார்வையிட்டது.

இந்தக் கசிவை உடனடியாகத் தடுத்து நிறுத்துவது கஷ்டம் எனினும் அதிகாரிகள் யாழ்.போதனா வைத்தியசாலையில் இருந்து இந்தக் குழாய் ஊடாகப் பண்ணைக் கடலுக்குக் கழிவுநீர் வெளியேற்றும் ('பம்' செய்யும்) நேரத்தைக் குறைத்துள்ளனர்.

கழிவுநீரைத் தொடர்ந்து வெளியேற்றாமல் பதினைந்து நிமிடத்துக்கு ஒரு தடவை விட்டுவிட்டு வெளியேற்றுமாறு தமது தொழிலாளர்களுக்குப் பணித்துள்ளனர்.

அத்துடன் பண்ணைப் பகுதியிலும் பெருமளவு கழிவுநீர் தங்கி நிற்பதைத் தவிர்ப்பதற்கும் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இது தொடர்பாக வைத்தியசாலை அதிகாரிகளுடன் தொடர்புகொண்ட போது அவர்கள் தெரிவித்துள்ளதாவது:-

கடந்த 5 வருடங்களாக இந்தக் குழாயில் இருந்து கழிவுநீர் கசிந்து கொண்டிருக்கிறது. இந்தத் திருத்த வேலைகளைப் பொறுப்பெடுத்துச் செய்வதற்கு யாழ்ப்பாணத்தில் எவரும் முன்வருகிறார்கள் இல்லை.

யாழ்.மாநகர சபையுடன் இது தொடர்பாகத் தொடர்பு கொண்ட போது, இதற்கும் தமக்கும் எந்தவிதத் தொடர்பும் இல்லை என்று கையை விரித்து விட்டனர்.

வைத்தியசாலையில் இருந்து பண்ணை வரை இரண்டு கிலோமீற்றர் தூரத்துக்கு தரையின் கீழ் செல்லும் கழிவு நீர்க் குழாயினைத் திருத்தி அமைப்பதற்கு ஒரு கோடியே 50 லட்சம் ரூபா செலவாகும் என்று மதிப்பீடு செய்யப்பட்டது.

இந்த மதிப்பீட்டினை ஏற்று வடக்கின் மீள் குடியமர்வு புனர்வாழ்வு புனரமைப்பு அதிகார சபை இதனைத் திருத்தி அமைப்பதற்கு முன் வந்தது. இதற்காக முதற் கட்டமாக இந்தச் சபையினால் 50 லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டு கட்டடத் திணைக்களத்திடம் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது.

இத்திட்டத்தினை திணைக்களத்தினால் செய்யமுடியாமையினால் இந்த நிதி திரும்பப் பெறப்பட்டது - என்றும் அவர்கள் மேலும் தெரிவித்தனர். (க-5-6)



வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலையில் கண்பரிசோதனை மேற் கொண்டவர்களில் தெரிவு செய்யப்பட்ட வறிய மக்களுக்கு கண்ணாடிகள் வழங்கும் மூன்றாவது நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

அகதிகளுக்கான ஐ.நா.தூதரக வெளிக்கள பிரதிநிதி ஜொனஸ் என்.முஷி பொதுமகன் ஒருவருக்கு கண்ணாடி அணிவிப்பதை படத்தில் காணலாம். வல்வெட்டித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி க.மயிலேறும்பெருமாளும் உடனிருக்கிறார். (ம)

# இளைஞர்கள் ஒத்துழைத்தால் கசிப்பை ஒழித்துக் கட்டலாம்

## மதுவரி உதவி ஆணையாளர் கூறுகிறார்

குடாநாட்டில் பெருகி வரும் கசிப்பு சட்டவிரோதமான மதுபானங்கள் மற்றும் கள் போன்றவற்றின் உற்பத்தியையும், விற்பனையையும் தடுத்து நிறுத்த குடாநாட்டு இளைஞர் சமுதாயம் ஒத்துழைப்புத் தரவேண்டும்.

இவ்வாறு அழைப்பு விடுத்துள்ளார் மதுவரித் திணைக்கள் உதவியாணையாளர் வீ.என்.சீறீகாந்தா.

அவர் மேலும் தெரிவித்ததாவது, கடந்த சில மாதங்களில் குடாநாட்டில குறிப்பாக கசிப்பு உற்பத்தி மிகவும் ஆச்சரியம் ஊட்டும் வகையில் அதிகரித்துள்ளது. நாட்டு நிலைமை சீரற்று இருந்தாலும் சென்ற வருடம் முழுவதும் 75 வரையிலான குற்றவாளிகள் இனம் காணப்பட்டு தண்டிக்கப்பட்டுள்ளனர். இவ்வருடம் கடந்த இரண்டு மாதங்களில் மட்டும் 65 சந்தேகநபர்கள் எம்மால் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் 45 பேர் கசிப்பு உற்பத்தியிலும், விற்பனையிலும் ஈடுபட்டவர்கள்.

இவர்களில் அதிகமானோர் திருநெல்வேலி கலாசாலை வீதி, கொட்டடி முஸ்லிம் தெரு, கோப்பாய், கோண்டாவில், ஆறுகால்மடம், ஓட்டுமடம், கொக்குவில் போன்ற பகுதிகளைச் சேர்ந்தவர்கள்.

எம்மிடம் போதிய ஆளணி மற்றும் வாகன வசதிகள் இல்லாமையினால் கசிப்பு உற்பத்தி நடைபெறுகின்ற ஏனைய இடங்களுக்குச் சென்று நடவடிக்கை எடுப்பதில் பிரச்சினைகள் உள்ளன.

குருநகர் போன்ற இடங்களில் அதிகளவு கசிப்பு விற்பனை செய்யப்படுவதாகத் தகவல்கள் கிடைத்துள்ளன. இவ்வாறான நிலையில் இதனை ஒரு சமூகப பிரச்சினையாக கருதி தடுத்து நிறுத்துவதற்காக இளைஞர் சமுதாயம் முன் வரவேண்டும். அதற்கு சமுர்த்தி உத்தியோகத்தர்கள், சனசமூக நிலையங்கள் மற்றும் அனைத்துப் பொதுமக்களும் ஒத்துழைப்புத் தரவேண்டும் என்றும் அவர்களுக்கு தேவையான உதவிகளை வழங்க நாம் தயாராக உள்ளோம்.

சென்ற வருடம் மட்டும் 2 லட்சத்து 69 ஆயிரம் ரூபா வரையில் குற்றப் பணமாக அறவிடப்பட்டது. இவ்வருடம இதுவரையில் ஒரு லட்சத்து 82 ஆயிரம் ரூபா குற்றப்பணமாக அறவிடப் பட்டுள்ளது - என்று அவர் கூறினார். (க-9)

# போதை வஸ்துப் பாவனையால் மனநிலை குழம்பியவர் தற்கொலை

## கோண்டாவில் பகுதியில் சம்பவம்

யாழ்ப்பாணம்,மார்ச்16

போதை வஸ்துப்பாவனையால் மனநிலை குழம்பியதாகக் கூறப்படும் குடும்பஸ்தர் ஒருவர் கோண்டாவில் பகுதியில் சுருக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டார்.

டென்மார்க்கில் 10 வருடமாகத் தங்கியிருந்த பின்னர் குடாநாட்டுக்குத் திரும்பிய 35 வயதுடைய ஒருவரே கழுத்தில் சுருக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டவராவார்.

இவர் தெல்லிப்பழை வைத்தியசாலையில் ஏற்கெனவே சிகிச்சை பெற்று வந்ததாகவும், இவரது மனைவி, பிள்ளைகள் வெளிநாட்டுக்குச் சென்று விட்டதால் தனிமையிலேயே வசித்து வந்ததாகவும், பெற்றோரால் தெரிவிக்கப்பட்டது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இவரைக் காணவில்லை என்று தேடிய போது அறையில் சுருக்கிட்ட நிலையில் சடலமாகத் தொங்கிக் கொண்டிருந்ததாகவும், கிராம சேவகரின் உதவியுடனும், பொலீஸாரின் உதவியுடனும் சடலத்தை யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. (க-6-ரி)

### யாழ்ப்பாணத்தில் இயங்கி வரும்

# தனியார் மருத்துவ நிலையங்கள் மீது தீவிர கண்காணிப்பு நடவடிக்கை

யாழ்ப்பாணம்,மார்ச்16

சுகாதாரத் திணைக்களத்தில் பதிவு செய்யப்படாமல் யாழ்ப்பாணத்தில் இயங்கும் தனியார் மருத்துவ நிலையங்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இதுவரை பதிவுசெய்யப்படாத தனியார் மருத்துவ நிலைய உரிமையாளர்கள் உடனடியாக சுகாதாரத் திணைக்களத்தில் பதிவு செய்து கொள்ளுமாறு சுகாதாரத் திணைக்கள மாகாண பிரதிப் பணிப்பாளர் டாக்டர் செல்வி உ.சிவபாதசுந்தரம் தெரிவித்துள்ளார்.

இந்த மருத்துவ நிலையங்களில் சுகாதாரத் திணைக் களத்தின் சட்ட விதிகளுக்கு அமைய சுகாதாரம் பேணப்பட வேண்டும் என்றும்-

நோயாளிகளுக்கு தரமான மருத்துவச் சேவைகள் வழங்கப்பட வேண்டும் என்றும் -

அடிப்படை வசதிகளற்ற நிலையில் செயற்படும் மருத்துவ நிலையங்கள் சுகாதாரத் திணைக்களத்தின் தீவிர கண்காணிப்புகளின் கீழ் கொண்டுவரப்படும் என்றும் அவர் கூறினார்.

பொதுமக்களிடம் அதிக பணத்தைப் பெற்றுக்கொண்டு தரமற்ற மருந்துகள் வழங்கி ஏமாற்றும் நடவடிக்கையில் சிலர் ஈடுபட்டுள்ளனர். இவற்றினைத் தடுக்கும் நோக்குடனேயே மேற்படி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன என்றும் தெரிவிக்கப் படுகிறது. (க-5-6)



பண்டிதர் க.நாகலிங்கம் எழுதிய "செந்தமிழ் இலக்கண விளக்கம்" என்ற நூல் வெளியீட்டு விழா அண்மையில் அளவெட்டி அருணோதயக் கல்லூரியில் இடம்பெற்றது.

பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்ட நூலாசிரியரை முதலாவது படத்தில் காணலாம்.

நூலின் முதற் பிரதியை வைத்திய கலாநிதி டாக்டர் வை.யோகேஸ்வரன் அவர்களிடமிருந்து சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி பெறுதை அடுத்துள்ள படத்தில் காணலாம். (ம-48)

# சமுர்த்தி அமுலாக்கல் அமைச்சு பணிகள் தனிச் சிங்களத்தில்

## வடக்கு, கிழக்கு மக்கள் பெரும் சிரமம்

கொழும்பு,மார்ச்16

சமுர்த்தி அமுலாக்கல் அமைச்சு தனது சகல நடவடிக்கைகளையும் தொடர்ந்து தனிச்சிங்களத்திலேயே மேற்கொண்டு வருகிறது. பணிப்புரைகள், சுற்றறிக்கைகள் படிவங்களில் கணிசமானவற்றை தனிச் சிங்களத்திலேயே வழங்கி வருவதால் வடக்கு, கிழக்கு மாகாணத்தில் இயங்கும் மாவட்ட அலுவலக உத்தியோகத்தர்களும் பொதுமக்களும் பலத்த சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

சமுர்த்தித் திட்டம் அடிமட்ட மக்களுடைய நலனுக்காகவே செயற்படுத்தப்பட்டு வருவதால் வடக்கு, கிழக்கைப் பொறுத்தவரை சிங்கள மொழி தெரியாத பொதுமக்களே இத்திட்டத்தோடு தொடர்புபட்டவர்களாக உள்ளனர். அத்தோடு சிங்கள மொழித் தேர்ச்சி தமிழ் அரச ஊழியர்களுக்கு கட்டாயமாக்கப்படாததால் பெரும்பாலான ஊழியர்களுக்கும் பரிச்சயமில்லாத காரணத்தினால் சமுர்த்தி அமைச்சு தனிச் சிங்களத்தில் தொடர்பு கொள்ளவதால் சிர மங்கள் எதிர் நோக்கப்படுகின்றன. (க)

### நீதிமன்ற புத்தகக் கட்டுநர் பதவி:

# விண்ணப்பத் திகதிக்குப் பின்னர் வந்து சேர்ந்த சுற்றறிக்கை

யாழ்.மாவட்டத்திலுள்ள நீதிமன்றங்களில் கடமையாற்றும் சிற்றூழியர்களிடம் இருந்து நீதிமன்ற புத்தகக் கட்டுநர் பதவிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ள போதிலும் --

விண்ணப்ப முடிவு திகதி முடிவடைந்த பின்னரே இது தொடர்பான சுற்றறிக்கை வந்து சேர்ந்துள்ளது.

நீதிச்சேவைகள் ஆணைக்குழுவினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள இந்தச் சுற்றறிக்கையில் இப் பதவிக்கான விண்ணப்ப முடிவு கடந்த பெப்ரவரி 22 ஆம் திகதி என்று தெரிவிக்கப்பட்டுள்ள போதும் சுற்ற றிக்கை கடந்த திங்கட்கிழமையே கிடைத்தது.

விண்ணப்ப முடிவு திகதி முடிவடைந்த நிலையில் யாழ்.மாவட்டத்திலுள்ள நீதிமன்றங்களிலுள்ள சிற்றூழியர்கள் பலர் இப் பதவிக்கான விண்ணப்பங்களை அனுப்பி வைத்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (க-5-6)

# வல்லைக் கடல் ஏரியில் மீன் பிடிக்கத் தடை; 1,200 குடும்பங்கள் பெரிதும் பாதிப்பு

வடமராட்சி,மார்ச்16

வல்லைக் கடல் ஏரியில் மீன் பிடிகக்த் தடை விதிக்கப்பட்டுள்ளதால் சுமார் ஆயிரத்து 200 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக கரவெட்டி சிந்தாமணி விநாயகர் மீனவர் கூட்டுறவுச் சங்கம் வடக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் முறையிட்டுள்ளது.

வல்லை, மண்டான், ஆயச்சந்தி, செம்பியன்பற்று, மருதங்கேணி கடலேரிப் பகுதிகளில் டிசெம்பர் மாதம் முதல் ஏப்ரல் மாதம் வரையிலான காலப் பகுதியில் பெருமளவில் இறால பிடிப்பது வழக்கம்.

இராணுவ நடவடிக்கை காரணமாக மருதங்கேணி, செம்பியன்பற்று பகுதிகளிலிருந்து மக்கள் இடம்பெயர்ந்ததால் அப்பகுதி ஏரிகளில் மீன் பிடிக்க முடியவில்லை.

தற்போது ஆயச்சந்தி, மண்டான், வல்லைக் கடல் ஏரிப்பகுதியில் மீன் பிடிக்கத் தடைவிதிக்கப்பட்டுள்ளது. அத்துடன் இப்பகுதிகளில் மீன் பிடிபடக் கூடிய ஏரிப் பகுதியைத் தவிர்த்து 200 யார் தூரத்துக்கு அப்பால் மீன் பிடிக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. அறிவிக்கப்பட்ட பகுதிகளிலும் மீன் பிடிக்க முடியாத நிலை இருந்து வருகிறது.

வீசு வலை மீன் பிடித் தொழிலை நம்பியுள்ள கரவெட்டிப் பகுதி மீனவர்களுக்கு வல்லைக் கடலேரியில் மீன் பிடிக்க அனுமதி பெற்றுத் தருமாறு வேண்டுகிறோம் என அந்த முறைப்பாட்டில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளது. (ம-173)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## வாடகைக்கு

3ஆம்/4ஆம் குறுக்குத்தெருக்கள சந்தியில் அடைக்கலமாதா கோயிலை அண்மித்து 5-4 அறைகளுடன் 2 வீடுகள் அடங்கிய மேல்மாடி (கீழ் வீடுகளும்) வாடகைக்கு/குத்தகைக்கு உண்டு. அரச திணைக்களம்/பதிவு செய்யப்பட்ட ஸ்தாபனங்கள் /தனியார் கல்வி நிறுவனங்கள், மருத்துவ மனைகள் விரும்பத்தக்கது. தொடர்பு: N.இம்மானுவல், 201/1, 3ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (85274)

## வீடு விற்பனைக்கு

யாழ்.கச்சேரி, பஸ் நிலையத்துக்கு முன்பாக 38 ஆம் இலக்கத்தில் உள்ள சகல வசதிகளுடன் கூடிய பெரிய வீடு விற்பனைக்குண்டு. நேரடித்தொடர்புக்கு:- திருமதி S.படியலிங்கம், 38,கச்சேரி நல்லூர் வீதி,யாழ்ப்பாணம். (85408)

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கு நூறு மீற்றர் சமீபமாக (Opposite Brown Field) மூன்று லாச்சம் ஒன்பது குழி (3 Lms V.C & 9kls) காணியுடன் வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ஜெ.ஆர்.குணசேகரம், 214, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். (தொலைபேசி இல. 021-2438) (85383)

## இலக்கியக் கட்டுரைகள்

11.03.2001 உதயனில் அராலியூர் ந.சுந்தரம்பிள்ளையின் இலக்கியக் கட்டுரைகள், நூலின் விமர்சனத்தை வாசித்தீர்களா? இல்லையென்றால் அதைத் தேடி எடுத்து வாசியுங்கள். நூலில் எழுதப்பட்டுள்ளவற்றையும் நூலின் தரத்தையும் அறிந்து கொள்ளலாம். (85317)

## விற்பனைக்கு

நவாலி வீதி, சங்கரத்தையில் 4 அறைகளுடன் களஞ்சிய அறையும் போசன அறையும் சமையல் அறையும் இணைந்த கல்வீடும் கிணறும் சேர்ந்த காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: கா.ச.சற்குணானந்தன், "பாலானந்த பவனம்", சங்கரத்தை, வட்டுக்கோட்டை. (85443)

201,202 தொடர் இலக்கமுடைய கொழும்பில் இருந்து தருவிக்கப்பட்ட ஓட்டோக்கள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- 23, உடுவில் வீதி, மானிப்பாய். (85402)

கடைப்பாவனைக்குரிய கண்ணாடி சோக்கேஸ், கவுண்டர் மேசை, கதிரைகள் என்பன விற்பனைக்கு உண்டு. கிழமை நாள்களில் காலை 9.00 மணி தொடக்கம் 1.00 மணிவரை பார்வையிடலாம். தொடர்பு: 150, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். (85456)

**HONDA C.D** 175 மோட்டார் சைக்கிள் **(ONE OWNER), ENGLISH** பற்றி சார்ச்சர் **(CYRPTON)** 20 பற்றிகள் சார்ச் பண்ணக் கூடியது, றெக்கோடிங் பாருக்கு உகந்த பழைய அரிய சினிமாப் பாடல்கள் கொண்ட ஒலி நாடாக்கள் (ஸ்பூல்டேப்), **L.P-E.P** றெக்கோட்டுகள் என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்பு: மாசிலாமணி, "சரஸ்வதி வாசம்", தாவடிப் பிள்ளையார் கோயிலடி ஒழுங்கை, தாவடி. (85435)

மீன்களுடன் தொட்டியும், வீட்டுத் தளபாடங்களும் விற்பனைக்குண்டு. பார்வையிடும் நேரம் 10.00 மணிக்கு முன். தொடர்பு: மு.பத்மநாதன், 22/37, விதானையார் வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். (85490)

## மணமகள் தேவை

யாழ்.இந்து உயர் கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 42 வயது, வெளிநாட்டில் (பாரிஸ்) தொழிற்சாலை ஒன்றில் மேற்பார்வையாளராகப் பணிபுரியும் மணமகனுக்கு மாமிச போசனமற்ற படித்த, அழகான, 35-40 வயதுக்கிடைப்பட்ட மணமகள் தேவை. தொடர்பு: K.T.மூர்த்தி, கொடிகாமம் வீதி, புலோலிதெற்கு, புலோலி. (85446)

## சேவை

உங்கள் சர்வதேச தொலைத் தொடர்புகளை எங்கள் ஊடாக இணைப்பதன் மூலம் மிகக் குறைந்த கட்டணத்தில் மிகமிகத் தெளிவாக நீங்கள் உரையாட உங்கள் தொலைபேசியில் **IDD** வசதி தேவையில்லை. அழையுங்கள் 551172, 552238. **(C/15661)**

## விற்பனைக்கு

கட்டில்கள் மலிவாக விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 143, 4ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். (85489)

## பிறிமா குஞ்சுகள்

பிறிமா இன வெள்ளைப் பேட்டுக் குஞ்சுகள் உடன் விற்பனைக்கு உண்டு. புறொயிலர் குஞ்சுகள் முன் பதிவு செய்தவர்களுக்கு விநியோகிக்கப்படும். தொடர்பு: வை.சிவகுமார், 461, நாவலர் வீதி, அத்தியடி, யாழ்ப்பாணம். வை.சிவகுமார், 123A, மின்சாரநிலைய வீதி, பஸ் நிலையம் முன்பாக, "கிளின்சொட்" அருகில், யாழ்ப்பாணம். (85494)

## நேர்முகப் பரீட்சை

யாழ்.மாநகர சபையின் சுகாதார வைத்திய அதிகாரிகளைத் தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 21ஆம் திகதி புதன் கிழமை காலை 10.00 மணிக்கு யாழ்.மாநகர சபை அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

நேர்முகப் பரீட்சைக்கான கடிதங்கள் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக யாழ்.மாநகர சபை ஆணையாளர் இராசா. தணிகாசலம் தெரிவித்துள்ளார். (ம-6-9)

## கருத்தரங்கும் பயிற்சிப் பட்டறையும்

வடமராட்சி கல்வி வலயத்தில் தரம் 6,7 வகுப்புகளில் ஆங்கிலம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான கருத்தரங்கும் பயிற்சிப்பட்டறையும் நாளை சனிக்கிழமை முற்பகல் 8.30 மணிக்கு நெல்லியடி மத்திய மகா வித்தியாலய ஆசிரிய பயிற்சி நிலையத்தில் நடைபெறும். (ம-118)

## கலைவிழா

யாழ்ப்பாணம்,மார்ச்16

நல்லூர் இளங்கலைஞர் மன்றம் நடத்தும் மாதாந்தக் கலைவிழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.00 மணிதொடக்கம் 6.30 மணிவரை கலாமண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ம-ரி)

## 160 தபாற் பொதிகள் கப்பலில் வந்தன

யாழ்ப்பாணம்,மார்ச்16

காங்கேசன்துறை துறைமுகத்திற்கு நேற்று வந்து சேர்ந்த செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கப்பலில் குடாநாட்டுக்கான வெளியூர்த் தபால்கள் அடங்கிய 160 தபாற் பொதிகள் எடுத்து வரப்பட்டன.

இதேகப்பலில் குடாநாட்டில் சேகரிக்கப்பட்ட வெளியூர்த் தபால்கள் அடங்கிய 58 தபாற்பொதிகள் அனுப்பி வைக்கப்பட்டதாக யாழ். பிரதம தபாலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (க-6)

## வடமராட்சியில் மலேரியா 'கிளினிக்'குகள்

யாழ்ப்பாணம்,மார்ச்16

வடமராட்சிப் பகுதியில் மலேரியா காய்ச்சல் பரவி வருவதனால் மலேரியா 'கிளினிக்'குகளை அங்கு தொடர்ந்து நடத்துவது என்று யாழ்ப்பாணத்திலுள்ள சுகாதார திணைக்கள மாகாணப் பிரதிப் பணிப்பாளர் அலுவலகத்தில் புதன்கிழமை நடைபெற்ற கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

மலேரியா பரவி வருவதைத் தடுக்கும் நோக்குடன் வடமராட்சியில் வாரத்தில் செவ்வாய் மற்றும் சனிக் கிழமைகளில் மூன்று இடங்களில் இந்தக் 'கிளினிக்'குகள் நடத்தப்படும என்று பிரதிப் பணிப்பாளர் டாக்டர் செல்வி உ.சிவபாதசுந்தரம் தெரிவித்தார். (க-5-6)

# கண்ணீர் அஞ்சலி



## ஆறுமுகம் மகாலிங்கம்

"சைவத்தின் காவலர்"

அன்னாரின் மறைவு சைவ உலகிற்கும் இந்து மக்களுக்கும் பேரிழப்பாகும். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்ம சாந்திக்காக மானிப்பாய் மருதடி விநாயகரைப் பிரார்த்திக்கின்றோம்.

ச.சிவகுமாரன்
*தலைவர்*

இ.வசந்தகுமார்
*செயலாளர்*

- மானிப்பாய் கோவில்பற்று இந்து சமய விருத்திச் சங்கம்.

(C/15743)

# சதாவதானி கதிரைவேற்பிள்ளை குருபூசைத்தின கட்டுரைப்போட்டி

**மேற்படி போட்டிக்கான கட்டுரைத் தலைப்புக்கள் பின்வருமாறு:**

- "மேலைப்புலோலி பெற்றெடுத்த அருந்தமிழ்ப் பெருமகன் கதிரைவேற்பிள்ளை"
- "சைவத்துக்குப் புத்துயிர் அளித்த சதாவதானி"
- "கதிரைவேற்பிள்ளை காணவிழைந்த சமூகம்"
- "சதாவதானியின் வழிப்படுத்தலில் சைவமும், தமிழும்"

**போட்டி விதிகள்:**

1. கட்டுரை, தாளின் ஒரு பக்கத்தில் மட்டுமே எழுதப்பட்டிருத்தல் வேண்டும். அத்துடன் "ஏ-4" தாளில் ஐந்து பக்கங்களுக்கு மேற்படாமல் இருத்தல் வேண்டும்.
2. ஆக்கங்கள் தட்டச்சில் பொறிக்கப்பட்டவையாக அல்லது தெளிவான கையெழுத்துப் பிரதிகளாக இருத்தல் வேண்டும்.
3. போட்டியாளரின் முழுப்பெயர், விலாசம் என்பன வேறொரு தாளில் எழுதப்பட்டு, ஆக்கத்துடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். அத்துடன் சமர்ப்பிக்கப்படும் கட்டுரை "தமது சொந்த முயற்சியிலான ஆக்கம்" எனவும் வெளிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.
4. போட்டி விதிக்களுக்கு அமையாத கட்டுரைகள் நிராகரிக்கப்படும். நடுவர் குழுவின் தீர்ப்பே இறுதியானதாகும்.
5. ஆக்கங்கள் 31.03.2001 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்பதாகவோ "செயலாளர், சதாவதானி கதிரைவேற்பிள்ளை சனசமூக நிலையம், பருத்தித்துறை" என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலமோ அல்லது நேரடியாகவோ சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

**செயலாளர்,**
**சதாவதானி கதிரைவேற்பிள்ளை**
**சனசமூக நிலையம், பருத்தித்துறை.**

(85492)

# யாழ்.போதனா ஆஸ்பத்திரிக்கு கண் சத்திரசிகிச்சைக் கருவிகள்

## லயன்ஸ் கழகம் அன்பளிப்பு

சர்வதேச லயன்ஸ் கழகங்களின் கூட்டமைப்பு யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கண் சத்திர சிகிச்சைக்கான கருவிகளை அன்பளிப்புச் செய்துள்ளது.

இந்த உபகரணங்களை எதிர்வரும் 20ஆம் திகதி செவ்வாய்க் கிழமை காலை 9.30 மணிக்கு லயன்ஸ் கழக மாவட்ட ஆளுநர் லயன். ரோகித்த உடவத்த உத்தியோக பூர்வமாக யாழ்.மருத்துவமனைக்கு வழங்குவார்.

யாழ்.போதனா வைத்தியசாலையின் ஆண்களுக்கான கண் சிகிச்சைப் பிரிவில் இதற்கான வைபவம் இடம்பெற உள்ளது. (ஓ)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

எமது ஆலயத்தின் பரிபாலனசபைத் தலைவரும் இணுவில் இந்துக் கல்லூரியின் பிரதி அதிபருமாகிய



## திரு.த.சண்முகசுந்தரமூர்த்தி

அவர்கள்

அதிபர் தரம் 2-1இற்குப் பதவி உயர்வுபெற்றமையையிட்டு உள்ளம் கனிந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்.

மனோன்மணி அம்பிகா சமேத
ஸ்ரீ சிவ பூதவராயர் தேவஸ்தான
பரிபாலன சபையினரும்,
ஊர்மக்களும்.

*கோண்டாவில் வடக்கு,*
*கோண்டாவில்.*

(85501)

# கண்ணீர் அஞ்சலி



## அமரர் ஆறுமுகம் மகாலிங்கம்

(பிரதேச செயலர் - வலிகாமம் தெற்கு)

யாழ்/மயிலணி சைவமகாவித்தியாலய சமூகத்தின் அன்புக்குரிய அமரர் ஆ.மகாலிங்கம் அவர்களின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதுடன் அன்னாரின் பேரிழப்பால் துயருறும் அவர்தம் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தினையும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
சக உத்தியோகத்தர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
**யா/மயிலணி சைவ மகாவித்தியாலயம்,**
**சுன்னாகம்.**

(85486)

# கண்ணீர் அஞ்சலி

உடுவில் பிரதேச செயலரும்,
இந்து சமயப் பேரவை
உப தலைவருமான



அமரர்
## ஆறுமுகம் மகாலிங்கம்
அவர்கள்

ஆற்றிய அரும் பெரும் பணிகளை நினைவு கூர்வதோடு, அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறுவதோடு அவரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

பணிப்பாளர், பணியாளர்கள்,
**தெல்லிப்பழை ப.நோ.கூ.சங்கம்.**

*தெல்லிப்பழை.*

(C/15742)

இந்தியாவில் பரபரப்பை ஏற்படுத்திய

# ராணுவத்துறை பேர ஊழல்; உள்துறை அமைச்சு மறுப்பு

புதுடில்லி, மார்ச் 16

இந்தியாவில் இராணுவத் தளபாடப் பேரத்தில் ஊழல் நிகழ்ந்திருப்பதாக ''தெகல்கர் டொட் கொம்'' இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ள தகவலில் சிறிதும் உண்மை கிடையாது என்று மத்திய உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இந்திய-எல்லைப் பகுதியில் முட்கம்பி வேலி அமைப்பது ராணுவத்துக்கு தகவல் தொடர்பு சாதனங்கள் வாங்குவது தொடர்பாக இஸ்ரேலிய நிறுவனம் ஒன்றிடம் இருந்து 325 கோடி ரூபா தரகுப் பணம் பெறப்பட்டதாகவும்,

இதில் அரசியல் வாதிகளும் அதிகாரிகளும் பலனடைந்துள்ளதாகவும்,

இணையத் தளத்தில் செய்திவெளியிடப்பட்டுள்ளது

இது குறித்து கருத்து வெளியிட்டுள்ள மத்திய உள்துறை அமைச்சகம், ரகசியப் பேரம் குறித்த குற்றச்சாட்டுக்களை முற்றாக நிராகரித்துள்ளது.

அத்துடன், எல்லையில் வேலி அமைக்கவோ, அல்லது தகவல் தொடர்பு சாதனங்கள் வாங்கவோ எந்த ஓர் இஸ்ரேலிய நிறுவனத்துடனும் ஒப்பந்தம் செய்யப் படவில்லை என்றும், இத்தகைய குற்றச்சாட்டு களங்கம் விளைவிப்பதாகவும், குறும்புத்தனமானதாக உள்ளதாகவும் உள்துறை அமைச்சு கூறியுள்ளது.

இதற்கிடையில் ராணுவ பேர ஊழல் தொடர்பாக மத்திய அரசு பதவி விலக வேண்டும் என்று இந்திய நாடாளுமன்றத்தில் எதிர்க் கட்சிகள் ஆர்ப்பாட்டம் நடத்தியதால் நாடாளுமன்றத்தின் இரு சபைகளும் ஒத்தி வைக்கப்பட்டன.

## இடைநிறுத்தம்

இந்தியாவில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ள ஆயுத பேர ஊழல் விவகாரம் தொடர்பாக மத்திய பாதுகாப்புத் துறையைச் சேர்ந்த 4 உயரதிகாரிகள் பணிகளிலிருந்து இடை நிறுத்தப்பட்டுள்ளனர்.

# தமிழக அரசியலில்...

## அ.தி.மு. கவுடன் காங்கிரஸ் இணைந்தது ஆச்சரியமானது

### பா. ஜ. க. தலைவர் கூறுகிறார்

புதுடில்லி, மார்ச் 16

தமிழகத்தில் அ.தி.மு.க கூட்டணியில் காங்கிரஸ் இணைந்திருப்பது ஆச்சரியத்தை ஏற்படுத்துவதாக பாரதீய ஜனதா கட்சியின் செய்தித் தொடர்பாளர் மல்கோத்ரா கூறியுள்ளார்.

புதுடில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய மல்கோத்ரா, ராஜீவ் காந்தி படுகொலைச் சம்பவத்தில் தி.மு கவுக்குப் பங்கிருப்பதாக ஜெயின் கமிஷன் கூறியதன் அடிப்படையில் அப்போது தி.மு.க. அங்கம் வகித்த ஐக்கிய முன்னணி அரசுக்கு அளித்து வந்த ஆதரவை விலக்கிய காங்கிரஸ், தற்போது, விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு தெரிவிக்கும் பா. ம. க அங்கம் வகிக்கும் அ.தி மு.க.கூட்டணியில் இணைந்து ஆச்சரியமளிப்பதாகத் தெரிவித்தார்.

(ஓ-7)

# ஐரோப்பிய இறைச்சி வகைக்கு உலகளாவிய ரீதியில் தடைவிதிப்பு

ஐரோப்பிய நாடுகளிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் இறைச்சி வகைகளுக்கு உலகளாவிய ரீதியில் தடை ஏற்பட்டுள்ளது.

பிரிட்டனில் கால்நடைகளை பாதித்த மாட்டுப்பைத்திய நோய், கால்-வாய்ப்புண் நோய் போன்ற தொற்று நோய்கள் மற்றைய ஐரோப்பிய நாடுகளில் உள்ள கால்நடைகளுக்கும் பரவியிருந்தன.

தற்போது பிரான்ஸிலும் கால்நடைகள் தொற்று நோய்ப்பாதிப்புக்கு உள்ளாகியுள்ளன.

இதனையடுத்து அமெரிக்கா, கனடா, ஜப்பான் ஆகிய நாடுகளில் இருந்து இறைச்சி இறக்குமதி செய்வதை நிறுத்தியுள்ளன.

இதேவேளை —

வட அமெரிக்க நாடான ஆர்ஜென்ரீனாவிலும் கால்நடைகள் தொற்று நோய்த் தாக்கத்துக்கு உள்ளாகி வருதாகக் கூறப்படுகிறது.

# ஓசையின்றி உயிரைப் பறிக்கும் இஸ்ரேலின் நவீனரக ஆயுதம்

காஸா, மார்ச் 16

எந்தவித ஓசையையும் ஏற்படுத்தாமல் உடலினுள் புகுந்து உயிரைப் பறிக்கும் பேராபத்து நிறைந்த புதிய ஆயுதம் ஒன்றை இஸ்ரேலிய ராணுவத்தினர் பயன்படுத்தி வருவதாகப் பலஸ்தீன அதிகாரிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இஸ்ரேலின் சொந்தத் தயாரிப்பான இந்த ஆயுதம் நுண்ணிய ஊசிகள் போன்ற சிதறல்கள் மூலம் ஒருவர் அறியாமலேயே அவரது உடலைத் தாக்கி உயிரிழக்கச் செய்வதாகக் கூறப்படுகிறது.

கடந்த 2 ஆம், 10 ஆம் திகதிகளில் வீதியோரத்தில் கிடந்த இரு பலஸ்தீனர்களின் உடல்களைப் பரிசோதனை செய்த போதே இந்தப் புதிய வகை ஆயுதம் குறித்து தெரிய வந்ததாகவும் —

ராக்கெட் தாக்குதல்களின் இறுதியில் அல்லது அம்புகள் எய்யப்படுவது போல் இந்த ஆயுதம் பிரயோகிக்கப்படலாம் என்றும் —

பலஸ்தீன அதிகாரிகள் கூறினார்கள்.

இந்த நாசகார ஆயுதம் குறித்துக் கருத்துத் தெரிவித்த பலஸ்தீன அரசின் பேச்சாளர், மனித நரம்பு மண்டலத்தைப் பாதிக்கும் வாயுக் குண்டுகளை சில வாரங்களின் முன்னர் உபயோகப்படுத்திய இஸ்ரேலியப் படையினர் தற்போது புதியரக ஆயுதத்தைப் பயன்படுத்துவதாகக் கூறினார்.

(ஓ)

சிறுமிகளை அடிமைகளாக்கும்

# பால்ய விவாகங்களை நிறுத்த 'யுனிசெவ்' அமைப்பு வேண்டுகோள்

நியூக்யோர்க். மார்ச் 16

ஆபிரிகாவிலும், தெற்காசியாவிலும் இடம்பெறும் பால்ய விவாகங்களை நிறுத்துமாறு யுனிசெவ் எனப்படும் ஐ.நா குழந்தைகள் கல்வி நிதியம் கேட்டுக்கொண்டுள்ளது.

உலக மகளிர் தினத்தை முன்னிட்டு அந்த அமைப்பு வெளியிட்ட அறிக்கையில் இந்த வேண்டுகோள் விடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது;-

பால்ய விவாகத்துக்கு நிர்ப்பந்திக்கப்படும் சிறுமிகள் ஆயுள் முழுவதும் பாலியல், வீட்டு வேலைகள் ஆகியவற்றில் அடிமைகளாகஇருக்க வேண்டியுள்ளது. பால்ய விவாகத்தால் பிள்ளைகளின் அடிப்படை உரிமையான கல்வியும் மறுக்கப்படுகிறது.

தகுந்த வயதுக்கு முந்தைய கர்ப்பத்தையும், சில சமயங்களில் இளம் வயது மரணங்களையும் பால்ய விவாகம் ஏற்படுத்துகிறது.

கன்னிப் பெண்களுடன் உறவு கொள்வதன் மூலம் ஆண்களின் நோய்கள் தீரும் எனச் சில நாடுகளில் நிலவும் மூட நம்பிக்கையால் சிறு வயதில் பெண்கள் எயிட்ஸ் நோய்ப் பாதிப்புக்குள்ளாகிறார்கள்.

ஈராக்போன்ற சில நாடுகளில் ஏழ்மை காரணமாகப் பால்ய விவாகங்கள் அதிகரித்து வருகின்றன. வேறு சில நாடுகளில் பெண்களை நடத்தை தவறாமல் பாதுகாப்பதற்காகச் சிறு வயதிலேயே திருமணம் செய்து கொடுத்து விடுகிறார்கள்.

கொங்கோ, ஜனநாயகக் குடியரசு, ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ், ஹொண்டுராஸ், ஈராக், நேபாளம், எகிப்து, ஜோர்டான், லெபனான், துருக்கி ஆகிய நாடுகளில் பால்ய விவாகங்கள் அதிகமாக இடம்பெறுகின்றன.

பால்ய விவாகத்தினால் மணம் முடிக்கப்படும் சிறுமி, கணவன் மற்றும் உறவினர்களால் தாக்குதலுக்கு உள்ளாக்கப்படும் சம்பவங்களும் கணிசமாக இடம்பெற்று வருகின்றன.

(ஓ)

உலக அரங்கில்

# பாமியான் புத்தர் 'சிலைகள் 'யுனெஸ்கோ' பட்டியலில்இல்லை

காபூல், மார்ச் 16

ஆப்கானிஸ்தானில் ஆளும் தலிபான்களால் தகர்க்கப்பட்ட பாமியான் மாகாணப் புத்தர் சிலைகள் சர்வதேச ரீதியாகப் பாதுகாக்கப் படவேண்டிய கலைப்பொக்கிஷங்களின் பட்டியலில் 'யுனெஸ்கோ' உள்ளடக்கவில்லை என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

உலகில் பாதுகாக்கப்பட வேண்டிய புராதன கலைப் பொக்கிஷங்களை ஐ. நாவின் 'யுனெஸ்கோ' அமைப்பு பட்டியலிட்டுள்ளது.

இந்தப் பட்டியலில் இடம் பெற்றுள்ள புராதன சின்னங்களை அழியாமல் பாதுகாப்பது உலக நாடுகளின் கடமையாகக் குறிப்பிடப்படுகிறது.

பாமியான் புத்தர்சிலைகளின் மீது முன்னர் அக்கறைகாட்டாத 'யுனெஸ்கோ' வின் பட்டியலில் அவற்றைச் சேர்க்க நடவடிக்கை மேற்கொள்ளாத உலக நாடுகள் தலிபான்கள் சிலைகளை உடைக்கத் தொடங்கியவுடன் மட்டும் எதிர்ப்புக் குரல்கள் எழுப்புவது குறித்துக் குறை கூறப்படுகிறது.

## செய்தியாளரை வெளியேறும்படி தலிபான் ஆணை

காபூல, மார்ச் 16

பி பி ஸி செய்தி நிறுவனத்தின் செய்தியாளரை உடனடியாக நாட்டை விட்டு வெளியேறும்படி ஆளும் தலிபான் அரசு உத்தரவிட்டுள்ளது.

புராதன புத்தர் சிலைகள் தகர்க்கப்பட்ட செய்திகளை பி.பி ஸி. பக்கச் சார்புடன் விமர்சித்ததாலேயே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டதாக தலிபான் வெளியுறவு அமைச்சு தெரிவித்துள்ளது.

ராணுவத்துறை ஊழல் தொடர்பாக

# பெர்னாண்டஸின் ராஜினாமாவை ஏற்க பிரதமருக்கு வற்புறுத்தல்

புதுடில்லி, மார்ச் 16

இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸின் ராஜினாமாக் கடிதத்தை பிரதமர் வாஜ்பாய் ஏற்றுக்கொள்ள மறுத்தால், ஆளும் தேசிய ஜனநாயகக் கூட்டணியில் இருந்து திரிணாமுல் காங்கிரஸ்கட்சி விலகும் என்று அக்கட்சியின் தலைவியும், ரயில்வே அமைச்சருமான மம்தா பானர்ஜி எச்சரித்துள்ளார்.

பிரதமர் வாஜ்பாய்க்கு எழுதியுள்ள கடிதத்தில் இவ்வாறு தெரிவித்துள்ள மம்தா ஆயுத பேர ஊழல் குறித்து பாரபட்சமற்ற விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

ராணுவத்துறை ஊழலில் சம்பந்தப்பட்டதாக பெர்னாண்டஸ் மீது குற்றஞ்சாட்டி 'தெகல்கர் டொட் கொம்' என்ற இணையத் தளத்தில் செய்தி வெளியிடப்பட்டதை அடுத்து அவர் தனது அமைச்சர் பதவியை ராஜினாமா செய்ய முன் வந்தார்.

ஆனால் அவரது ராஜினாமாவை ஏற்க பிரதமர் மறுத்து விட்டார்.

தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசு பதவியேற்ற சமயத்தில், பெர்னாண்டஸுக்கும், மம்தாவுக்கும் இடையே அமைச்சுகள் பெறுவதில் போட்டி நிலவியது குறிப்பிடத்தக்கது.

(ஓ)

## பங்குச் சந்தைத் தலைவர் பதவியிழந்தார்

மும்பை, மார்ச் 16

இந்தியாவில் மும்பைப் பங்குச் சந்தையின் நிர்வாக சபைத் தலைவர் மற்றும் 7 இயக்குநர்களை இந்திய பங்கு வர்த்தகச் சீரமைப்பு வாரியம் பதவி அகற்றியுள்ளது.

இவர்கள் தங்களுடைய பதவிகளை முறைகேடாகப் பயன்படுத்தி பங்கு வர்த்தகம் தொடர்பான விவரங்களைப் பெற்று பங்கு விற்பனையில் ஈடுபட்டதன் மூலம் பங்கு விலைகள் சரியக் காரணமாக இருந்ததாகக் கூறப்படுகிறது.

## இதய அஞ்சலி

இந்து சமய வளர்ச்சிக்கு அருந்தொண்டாற்றியும்,
இந்து மத குருபாரம்பரியத்தை மதித்து
கௌரவப்படுத்தியும் வந்த பெருமகன்

### அமரர் ஆறுமுகம் மகாலிங்கம்

(உப தலைவா, இந்து சமயப் பேரவை)

அவர்களின் திடீர் மறைவுச் செய்தியைக் கேள்வியுற்று ஆழ்ந்த கவலையடைந்தோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு அவரின் பிரிவால் துயருற்று இருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

''சாந்தி''

சர்வதேச இந்து மத குருமார் ஒன்றியம்
பொதுச் செயலாளர்.

தலைமைச் செயலகம்,
74, பிறவுண் வீதி,
நீராவியடி,
யாழ்ப்பாணம்.

(சி/15744)

# அமைதியாக ஆரவாரமின்றிக் காரியங்களை நிறைவேற்றியவர் அமரர் மகாலிங்கம்

## இரங்கலுரையில் அரச அதிபர் சண்முகநாதன்

யாழ்ப்பாணம், மார்ச் 16

சிறந்த நிர்வாகியான அமரர் மகாலிங்கம், நிர்வாகத் துறையில் துணிவுடன் பல பணிகளை முன்னின்று செய்துள்ளார். அத்துடன் இந்து சமயப் பேரவை மூலம் அமைதியாகவும் ஆரவாரமின்றியும் எவரும் நிறைவேற்ற முடியாத பல காரியங்களைத் திறம்படச் செய்துள்ளார்.

இவ்வாறு யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க. சண்முகநாதன் தெரிவித்தார்.

வலி. தெற்கு பிரதேச செயலாளரும் இந்து சமயப் பேரவை உப-தலைவருமான அமரர் ஆ. மகாலிங்கத்தின் இரங்கலுரை நிகழ்வு அன்னாரின் இல்லத்தில் இந்து சமயப் பேரவைச் செயலாளர் சி. சக்திகிரீவன் தலைமையில் நேற்று வியாழக்கிழமை காலை நடைபெற்றது.

அரச அதிபர் தமது இரங்கலுரையில் மேலும் கூறியதாவது;-

அமரர் மகாலிங்கம் இந்து சமயப் பேரவையின் மூலம் இந்தியாவில் உள்ள அரசியல் தலைவர்களுடன் மிகவும் நெருக்கமான தொடர்புகளைக் கொண்டிருந்தார். தமிழ் மக்களின் பிரச்சினைகளையும் உண்மையான நிலைமையையும் இந்தியாவுக்கு எடுத்துக்கூறி பல நல்ல முயற்சிகளை மேற்கொண்டிருந்தார். இவரின் இந்தச் செயற்பாடுகள் வெளி உலகுக்குத் தெரியாது. அன்னார் மிகவும் அமைதியாக ஆரவாரமின்றி இந்தப் பணிகளைச் செய்துவந்தார்.

கடந்த ஆண்டு இடம்பெற்ற நாடாளுமன்ற பொதுத்தேர்தலில் அன்னார் போட்டியிட்டு வெற்றிபெற்று அவர் ஒரு நாடாளுமன்ற உறுப்பினராக வந்திருப்பார். நான்தான் அவரின் இத்தகைய முயற்சியைத் தடுத்து நிறுத்தினேன். சிறந்த நிர்வாகிகளுக்குப் பற்றாக்குறை இருக்கும் இக்கால கட்டத்தில் திறமையான நிர்வாகி ஒருவரின் சேவையை இழக்கக் கூடாது என்பதற்காகவே அவரின் முயற்சிக்குக் குறுக்கே நின்றேன் என்றார்.

### இந்துசமய எழுச்சிக்கு உழைத்தவர்

கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தமது இரங்கலுரையில்:-

இன்று நாம் நல்லதொரு சமூகத் தொண்டனையும் இந்து சமயப் பக்தனையும், இந்து சமய எழுச்சிக்காக உழைத்தவரையும் இழந்துள்ளோம். எம் மக்களுக்காக எத்தனையோ நல்ல விடயங்களை மேற்கொண்ட நல் இதயத்தை இழந்துள்ளோம்- எனக்குறிப்பிட்டார்.

மேலதி அரசாங்க அதிபர் து. வைத்திலிங்கம், ''சைவத்திற்கும் தமிழுக்கும் கலங்கரைவிளக்கமாக இருந்து தொண்டாற்றிய நல்ல நிர்வாகியை இழந்துள்ளோம்'' என்றார்.

யாழ் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் பிரதிநிதியாக சமூகவியல் துணைத் தலைவர் என். சண்முகலிங்கம், இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் சார்பில் க. பஞ்சலிங்கம், ஸ்கந்தவரோதயக் கல்லூரி அதிபர் கி. சிவாஜி, ஆறுதிருமுருகன் உட்பட மற்றும் பலர் இரங்கலுரை ஆற்றினர். (க-85)

# பதில் பிரதேச செயலராக நியமனம்

நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவின் பதில் பிரதேச செயலாளராக கோப்பாய்ப் பிரதேச செயலாளர் கே. கேதீஸ்வரன் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

பதில் பிரதேச செயலாளராகக் கடமையாற்றிய உடுவில் பிரதேச செயலாளர் ஆ. மகாலிங்கம் காலமானதால் அவரின் இடத்துக்கே இவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

# மகளிர் பஜனை

திருநெல்வேலியில் உள்ள சத்திய சாயி சேவா நிலையத்தில் எதிர்வரும் திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு விசேட மகளிர் பஜனை நடைபெறும்.

# வடக்கு-கிழக்கு அரச ஊழியருக்கு மேலதிகக் கொடுப்பனவு வழங்குக

## நிர்வாக அதிகாரிகள் சங்கம் கோரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 16

வடக்கு — கிழக்கில் பணியாற்றும் அரச ஊழியர்களுக்கான மேலதிகக் கொடுப்பனவுகளை 2000—2001 காலப் பகுதிக்கும்வழங்குமாறு யாழ். பல்கலைக்கழக நிர்வாக அதிகாரிகள் சங்கம் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் — அத்தியாவசியப் பொருள்களின் விலையேற்றம் இடப்பெயர்வுகளால் ஏற்பட்ட பாதிப்புகள் மற்றும் இழப்புகள், ஆகியவற்றில் மக்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புகள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

அரச ஊழியர்களின் மாதச் சம்பளத்தில் குறைந்தது 25 சதவீதத்தையாவது மேலதிகக் கொடுப்பனவாக வழங்கும்படியும் கடிதத்தில் கோரப்பட்டுள்ளது. (ஐ-ஒ)

# மாதாந்த பொதுசன உதவிப்பணம்

தென்மராட்சி, மார்ச் 16

பளைப் பிரதேச செயலகத்தில் மாதாந்த பொதுசன உதவிப்பணம் பெறுவோருக்கான மார்ச் மாதக் கொடுப்பனவுகள் பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவினரால் அந்தந்த அஞ்சல் அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

வடமராட்சிப் பகுதியில் இயங்கும் பளை அஞ்சல் அலுவலகம் மற்றும் முகமாலை எழுதுமட்டுவாழ் ஆகிய உப அலுவலகங்களிலும், வலிகாமம் பிரதேசத்தில் மானிப்பாய் அஞ்சல் அலுவலகத்திலும் எதிர்வரும் 25 ஆம் திகதி வரை இக்கொடுப்பனவைப் பெற்றுக் கொள்ளலாமென அறிவிக்கப்பட்டுள்ளது. (க-117)

# நோய்த் தடுப்புக்கு நிதி அதிகரிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 16

சுகாதார அமைச்சினால் நோய்த் தடுப்பு மற்றும் சுகநல முன்னேற்ற நடவடிக்கைகளுக்காக இதுவரை காலமும் செலவிடப்பட்ட நிதி இரு மடங்கால் அதிகரிக்கப்பட்டுள்ளது,

சுகாதார அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் இதுவரை காலமும் இதற்காக 16 வீத நிதியே ஒதுக்கப்பட்டு வந்தது தற்போது இந்நிதி 30 சதவீதமாக உயர்த்தப்பட்டுள்ளதாக சுகாதாரத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. (க—6)

# யாழ். பிரதேச செயலகத்தில் பயண விண்ணப்பப் படிவங்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 16

வெளிமாவட்டங்களுக்குச் செல்வதற்கு அனுமதி பெறுவதற்கான விண்ணப்பப் படிவங்கள் எதிர்வரும் திங்கள் தொடக்கம் யாழ். பிரதேச செயலகத்தினால் வழங்கப்படவுள்ளன.

இந்த விண்ணப்பப் படிவங்களையாழ். பிரதேசசெயலகத்தின்மானிப்பாய் வீதியிலுள்ள சமூர்த்தி வலய அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ் பிரதேச செயலக எல்லைக்குள் வசிப்பவர்களுக்கு மட்டுமே இங்கு வைத்து விண்ணப்பப் படிவங்கள் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-5)

# விளையாட்டு நிகழ்வு

சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலக தடகள விளையாட்டுப் போட்டி நாளை சனிக்கிழமையும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமையும் மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் பிரதேச செயலர் நா. வேதநாயகன் தலைமையில் இடம்பெறும். (ம-100)

# ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 16

வேலணைப் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் எதிர்வரும் 20 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை செயலக மண்டபத்தில் நடைபெற உள்ளது.

ஊர்காவற்றுறை மக்கள் வங்கியால் மாதாந்தம் நடத்தப்படும் நடமாடும் வங்கிச் சேவையும் அன்றைய தினம் வேலணைப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ம)

# முச்சக்கரவண்டி சக்கர நாற்காலி திங்கள் கையளிப்பு

நல்லூர்ப் பிரதேச செயலாளர் பிரிவைச் சேர்ந்த அங்கவீனர்கள் ஐவருக்கு முச்சக்கர வண்டி, சக்கர நாற்காலி என்பன வழங்கப்படவுள்ளன.

எதிர்வரும் திங்கட்கிழமை இணுவில் தனியார் வைத்தியசாலையில் உள்ள ஜெய்ப்பூர் தொழிலகத்தில் வைத்து மூவருக்கு முச்சக்கர வண்டியும் இருவருக்கு சக்கர நாற்காலியும் வழங்கப்படவுள்ளதாக சமூகசேவை உத்தியோகத்தர் க. யோகானந்தராசா தெரிவித்துள்ளார்.

முச்சக்கர வண்டி, சக்கர நாற்காலி போன்றவை தேவைப்படுபவர்கள் உரிய ஆவணங்களுடன் கிராம அலுவலர்களுடன் தொடர்பு கொண்டு பதிவு செய்யலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-86)

# மெய்வன்மைப் போட்டிகள்

குருநகர், மார்ச் 16

நல்லூர் ஆனந்த வித்தியாலயத்தின் இல்ல மெய்வல்லுநர் போட்டி எதிர்வரும் புதன்கிழமை பிற்பகல் 1.30 மணிக்குப் பாடசாலை மைதானத்தில் அதிபர் ஆ. இரத்தினசிங்கம் தலைமையில் நடைபெற உள்ளது.

யாழ். கல்வி வலயத்தின் உதவிக் கல்விப் பணிப்பாளர் என். ஜே. விஜயரட்ணம் பிரதம விருந்தினராகவும் முன்னாள் ஆசிரியர் செ. அ. அ. மதுரநாயகம், யாழ். கோண்டாவில் சி. சி. த. க. பாடசாலை அதிபர் இ. அருணாசலம், ஜே 91 கிராமசேவையாளர் பு. தஜீதரன், ஈரோவில் ஸ்தாபனத்தின் பொறியியலாளர் என். ராமதாஸ் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொள்வர். (ஐ-51)

★ ★ ★

கல்வியங்காடு இ.த.க.பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகள் நாளை சனிக்கிழமை பிற்பகல் 2-30 மணிக்குப் பாடசாலை மைதானத்தில் அதிபர் திருமதி செ. சகாதேவன் தலைமையில் நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வில் யாழ். கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் த. இராஜலிங்கம் முதன்மை விருந்தினராகவும் ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி கமலா சுப்பிரமணியம் சிறப்பு விருந்தினராகவும் மேற்படி பாடசாலையின் முன்னாள் அதிபர் க. தவராசா கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்வர் (ஐ-7)

# உலகத் திருச்சபை...

(முதலாம் பக்கத் தொடர்)

நேற்று மு.ப. 11.30 மணிக்கு யாழ். ஆயர் இல்லத்துக்கு விஜயம் செய்த இவர்கள் அங்கு யாழ். ஆயர் கலாநிதி தோமஸ் சௌந்தரநாயகம், நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள், தென்னிந்தியத்திருச்சபை ஆயர் வண. எஸ். ஜெபநேசன் உட்பட சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக்குமான மக்கள் குழுவின் பிரதிநிதிகளையும் சந்தித்தனர்.

மக்கள் குழுவின் தலைவர் டி. ஆர். அருமைநாயகம் தலைமையில் இடம்பெற்ற இச் சந்திப்பில் யாழ். ஆயர் கலாநிதி தோமஸ் சௌந்தரநாயகம் உரையாற்றும் போது கூறியதாவது:-

இன்று சமாதானத்தின் விளிம்பில் நாங்கள் நிற்கிறோம். சமாதானத்தை நடைமுறைப்படுத்துவதற்கு அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் ஒத்துழைக்க வேண்டும்.

இந்த வேளையில் உலகத் திருச்சபையின் செயலாளரின் வருகை எமக்குத் தெம்பு அளிக்கிறது.

சமாதானத்தை ஏற்படுத்துவது தொடர்பாக விடுதலைப் புலிகளின் தலைவர்கள் மற்றும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஆகியோருடன் நாம் பேச்சுக்களை நடத்தியுள்ளோம்—

இங்கு சமாதானத்தை நிலை நாட்டுவதற்கு உலகத் திருச்சபையும் அழுத்தம் கொடுக்க வேண்டும். என்று கூறினார்.

நல்லை ஆதீன முதல்வர் அங்கு உரையாற்றும் போது கூறியதாவது;-

கடந்த 20 வருடங்களாகத் தொடரும் கொடிய யுத்தத்தில் இருந்து நாம் மீள வேண்டும்.

எமது யாழ்ப்பாண மக்கள் சமாதானத்தை எதிர்பார்த்து ஏங்கிக்கொண்டிருக்கிறார்கள் எனவே இந்த நாட்டில் சுதந்திரமான, சமாதானவாழ்வை ஏற்படுத்த வேண்டும்—என்று கூறினார்.

### பேணாட் அடிகள்

வணபிதா ஏ. ஐ பேணாட் அடிகளார் உரையாற்றும் போது கூறியதாவது:-

30 வருடங்களாக சாத்வீக வழியில் ஒற்றையாட்சியின் கீழ் தமிழர்கள்தங்கள் உரிமைகளுக்காகப்போராடிய போது பலன் எதுவும் கிடைக்கவில்லை.

இதனால் தான் தனிநாட்டுக்கோரிக்கை எழுந்தது. தமிழர்கள் ஆயுதம் ஏந்த வேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்பட்டது.

பயங்கரவாதத் தடைச்சட்டம், அவசரகாலச் சட்டங்கள் போன்ற சட்டங்கள் உருவாக்கப்பட்டு ஏதேச்சையான கைதுகள், சித்திரவதைகள், பாலியல் வல்லுறவுகள், காணாமல் போதல், செம்மணி போன்ற புதைகுழிகள் போன்றவற்றுக்கு வழிவகுக்கப்பட்டன.

தமிழ் மக்கள் ஓர் இனமாக தம்மைத்தக்க வைப்பதற்கும், உரிமைகளுடன் தமது மாண்பைப்பாதுகாப்பதற்கும் ஏற்றவகையில் உடனடியாகப் போர் நிறுத்தம் செய்யப்பட்டு சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட வேண்டும்.

பேச்சுவார்த்தை ஆரம்பிப்பதற்கு முன் ஆகக்குறைந்த நிபந்தனையாக தமிழரின் சுயநிர்ணய உரிமை மதிக்கப்படவேண்டும். அவர்கள் ஒரு தேசிய இனம் என்பது ஏற்றுக் கொள்ளப்படுவதுடன் மரபு வழித்தாயகமும் அங்கீகரிக்கப்படவேண்டும்— என்று பேணர்ட் அடிகள் மேலும் கூறினார்.

மக்கள் குழுவின் இணைச் செயலாளர்களில் ஒருவரான சு. பரமநாதன் நன்றியுரை வழங்கினார். அவர் கூறியதாவது:

பல்லின மத, மொழி, கலாசாரங்களைக் கொண்ட மக்கள் வாழும் நாட்டில் அனைவருக்கும் சம உரிமைகள் வழங்கப்பட வேண்டும். அரசினால் தயாரிக்கப்பட்ட தீர்வுப் பொதி சிங்களப் பேரினவாதிகளின் அழுத்தம் காரணமாகப் பல தடவைகள் திருத்தியமைக்கப்பட்டது.

இந்தத் தீர்வுப் பொதியில் அரசமைப்பு மட்டத்தில் பௌத்த சமயத்துக்கு விசேட அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது. சமாதானத்தை அடைவதற்கு இந்தப் பாகுபாடுகள் நீக்கப்பட வேண்டும் என்று கூறினார்.

உலகத் திருச்சபையின் பொதுச் செயலாளர் கொன்ராட் றெய்ஸர் அங்கு உரையாற்றும் போது கூறியதாவது!

இலங்கை இனப்பிரச்சினைக்கு சமாதானத் தீர்வே காணப்பட வேண்டும். யுத்த நிலை தொடரக்கூடாது. போரினால் சிதைந்த உறவுகள் மீண்டும் கட்டி எழுப்பப்பட வேண்டும். யாழ்ப்பாணத்து மக்கள் படும் கஷ்டங்களை இங்கு வந்தபோதே நேரில் உணர்ந்து கொண்டேன் — என்று கூறினார்.

நேற்றுக்காலை யாழ்ப்பாணம் வந்து சேர்ந்த உலக திருச்சபைப் பொதுச் செயலாளர் யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரி, நவீல்ட் பாடசாலை, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி போன்றவற்றுக்கும் வட்டுகோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் விஜயம் செய்தனர். (ஐ-5)

# ST.PATRICK'S DAY

நாளை 17.03.2001 தமது பாதுகாவலரான புனித பத்திரிசியாரின் தினத்தை சிறப்பிக்கும் அதிபர், உப அதிபர், அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலைச் சமூகத்தினர் அனைவருக்கும் எமது இதயம் நிறைந்த வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றோம்.

பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள்.

* திருநாள் திருப்பலியிலும், அதனைத் தொடர்ந்து இடம்பெறும் காலை விருந்திலும் மற்றும் 150 ஆவது நிறைவு மலர் வெளியீட்டிலும் சங்க உறுப்பினர்களை கலந்துகொள்ள அதிபர் அவர்கள் அழைப்பு விடுக்கின்றார் என்பதையும் அறியத்தருகின்றோம்.

* அன்றய தினம் 150 ஆவது வருட நிறைவு சிறப்பிதழ், பாடசாலை TIE, CAP, T.SHIRT ஆகியவற்றைப் பெற்றுக்கொள்ள பாடசாலையில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

* 18.03.2001 காலை 10.30 மணிக்கு PATRICIAN SPORTS CLUB பொதுக் கூட்டம் இடம்பெறும். பழைய மாணவர்கள் இதில் இணைந்துகொள்ள அழைக்கப்படுகின்றீர்கள்.

* 17.03.2001 பிற்பகல் 5.00 மணிக்கு பழைய மாணவர் சங்கத்தினரால் பாதுகாவலர்தின தேநீர் விருந்து நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

*59,புனித பத்திரிசியார் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

- உதவிச் செயலாளர்.

(85504)


# மரண அறிவித்தல்கள்

## சந்திரசேகரம் சதாசிவம்

கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சந்திரசேகரம் சதாசிவம் நேற்று (15-03-2001) வியாழன் காலமாகிவிட்டார்.

அன்னார் சங்குவேலி செல்லத்துரை - வள்ளிப்பிள்ளையின்(சரசு) சகோதரனும் காலஞ்சென்ற நல்லம்மாவின் அன்புக் கணவரும், திருச்செல்வம், புஸ்பராணி, காலஞ்சென்ற அருட்செல்வம்(காந்தி), தவச்செல்வம், விஜயராணி, குணச்செல்வம்(ஓய்வு பெற்ற கிராம சேவையாளர், குடமியன்), பஞ்சலிங்கம், அகிலேஸ்வரி(சங்குவேலி),பத்மினிதேவி,கௌரிதேவி(சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், தவமணி, காலஞ்சென்ற பாலசுந்தரம், சிவலோகம், லோகேந்திராதேவி,இரத்தினேஸ்வரன், றோசாமலர், தங்கமணி, காலஞ்சென்ற மனோரஞ்சன் (ரஞ்சன் - சங்குவேலி),செல்வராசா, குணலிங்கம்(சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் கிருபாகரன், பிரபாகரன்(யாழ்.பல்கலைக்கழகம்), கிருபராணி, விஜயராணி, விஜயடேஸ்வரன் (சவூதி), அருள்ராஜ் (ஆசிரியர் யாழ்/குடமங்கால் றோ.க.வித்தியாலயம்), உசாந்தன், ராகுலன், அஜந்தன், ஜெயந்தன், சிந்துஜா, துஸ்யந்தினி, நிஜந்தன், மகிந்தன், ஜேதீஷன், கஸ்தூரி, மலர்வேந்தன், ஜெகதா, ராகவன், பிரசானந்தன், செந்தூரன், ஷாமினி, மதுஷான், மதுஷா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (16-03-2001) வெள்ளிக்கிழமை பி.ப. 1 மணியளவில் சங்குவேலி இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மானிப்பாய் பிட்டிலி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
திரு.S.குணச்செல்வம் (மகன்)

நிரந்தர முகவரி:
*கச்சாய் வீதி,*
*கொடிகாமம்.*

தற்காலிக முகவரி:
*சங்குவேலி தெற்கு,*
*மானிப்பாய்.*

(85509)

## சங்கரப்பிள்ளை சிவானந்தம்

கொல்லங்கலட்டி மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும், சரவணை கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட சங்கரப்பிள்ளை சிவானந்தம் காலமானார்.

அன்னார் நன்சினிதேவியின் அன்புக் கணவரும், நிரோஜன், ஜீவவாணி, தர்சிகா, சின்சுசன், நிவேஞ்சன் ஆகியோரின் அன்புத் தந்தையும், கந்தசாமியின் மருமகனும் கணேஸ், தேவி (இத்தாலி), வசந்தி, அழகன், செல்வன் (இத்தாலி), வவா, முகுந்தன் (இத்தாலி) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16-03-2001) வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு சரவணையில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*சரவணை கிழக்கு,*
*வேலணை.*

தகவல்:
அழகன (மைத்துனர்)

(85516)

## திருமதி அன்னலிங்கம் பூமணி

இணுவிலைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்னலிங்கம் பூமணி 14.03.2001 இல் காலமானார்.

அன்னார் ஆறுமுகம் சின்னட்பிள்ளை தம்பதிகளின் கனிஷ்ட புத்திரியும் அன்னலிங்கத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கந்தையா, செல்லத்துரை, சின்னத்துரை பொன்னம்பலம், வைத்திலிங்கம் ஆகியோரினதும் நாகம்மா, மகேஸ்வரி, நடராசா ஆகியோரினதும் அன்புச் சகோதரியும் இளங்கோவன் அன்னலட்சுமி, மகேஸ்வரன், பாஸ்கரன், பார்த்தீபன் (சுவிஸ்), தனலட்சுமி, பரதலட்சுமி, இராசலட்சுமி, பொற்செழியன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் றஞ்சி, மகாலிங்கம், (பிரதேச செயலகம், சுங்கானை), தேவி, இராஜேஸ்வரி (தாதி உத்தியோகத்தர் யாழ். போதனா வைத்தியசாலை), இராசதுரை, சிறிதரன் (சுவிஸ்), சந்திரசேகரம் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் றஞ்சன், திலீபன், லக்சிகா, கஜன், மகிந்தன் (சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர், சங்கானை), பிரசாத், பிறேம்நாத், சந்திரமோகன், அனுசியா, மயூரன், மயூரி, பிரபு, சரண்யா, யதுசன், யசிந்தன், நர்மதா, சசிலா, தசான் ஆகியோரின் பேர்த்தியும் சானுகாவின் பூட்டியும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் 15.03.2001 அன்று நடைபெற்று பூதவுடல் காரைக்கால் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*மஞ்சத்தடி,*
*இணுவில்.*

தகவல்:
அ.பாஸ்கரன் (ஈசன்)
(மகன்)

(85517)

## முல்லையில் தொண்டர் ஆசிரியர் மறியல்

வவுனியா,மார்ச்16

முல்லைத்தீவு மாவட்டப் பாடசாலைகளைச் சேர்ந்த தொண்டர் ஆசிரியர்கள் மேற்கொண்ட மறியல் போராட்டம் காரணமாகப் புதுக்குடியிருப்பு கல்வி வலயப் பணிமனையின் செயற்பாடுகள் யாவும் ஸ்தம்பித்தன.

நீண்ட காலமாகத் தொண்டர் ஆசிரியர்களாகப் பணிபுரியும் தமக்கு நிரந்தர நியமனம் வழங்குமாறு கோரியே நேற்று முன்தினம் இந்த மறியற்போராட்டம் நடத்தப்பட்டது.

போராட்டத்தின் இறுதியில் வலயக் கல்விப் பணிப்பாளருக்கு முல்லைத்தீவு தொண்டர் ஆசிரியர் சங்கத்தினால் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.

(ஐ-10)

## 'மோட்டறோலா' தொலைபேசிகள் 'அவுட்'

யாழ்ப்பாணம்,மார்ச்16

குடாநாட்டில் செயற்படும் 'மோட்டறோலா' தொலைபேசிகள் நேற்று முன்தினம் காலை முதல் செயல் இழந்துள்ளன.

தொழில்நுட்பக் கோளாறே இதற்குக் காரணம் என்று ரெலிக்கொம் அதிகாரிகள் தெரிவித்தனர்.

கொழும்பு பரிவர்த்தனை நிலையத்திலும், யாழ்ப்பாண உப நிலையத்திலும் இது தொடர்பான திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-3-6)

## கட்டடங்களின் தொகை மதிப்பீடு

வடமராட்சி,மார்ச்16

எதிர்வரும் ஜூன் மாதம் 28 ஆம் திகதி நடைபெறவுள்ள குடிசன வீட்டு வசதி தொகை மதிப்பீட்டுக்கு முன்னோடியாக கட்டடங்கள் நிரற்படுத்தும் பணிகள் யாழ்.மாவட்டத்தில் இம்மாதம் நடுப்பகுதியில் இருந்து ஆரம்பமாகியுள்ளன.

நிரற்படுத்தும் உத்தியோகத்தர்களாக கிராமசேவையாளர்கள் அனைவரும் நியமிக்கப்பட்டு இப்பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இவர்களுக்கான நியமனக் கடிதங்கள் பிரதித் தொகை மதிப்பு ஆணையாளர்களாக பதவி வகித்துவரும் பிரதேச செயலர்களினால் வழங்கப்பட்டுள்ளன.

நிரற்படுத்தும் உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி வகுப்பு வடமராட்சி வடக்கு பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் நேற்றும் நேற்று முன்தினமும் நடைபெற்றன. இப்பயிற்சி வகுப்பில் பிரதேச தொகைமதிப்பு உத்தியோகத்தர், யாழ்.மாவட்ட புள்ளிவிவரத் திணைக்கள உத்தியோகத்தர் ஆகியோர் பயிற்சிகளை வழங்கினர்.

(ஐ-173)

## கூட்டம்

தென்மராட்சி,மார்ச்16

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்ற செயற்குழுக் கூட்டம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு கரவெட்டியிலுள்ள மன்ற அலுவலகத்தில் நடைபெறும்.

செயற்குழு உறுப்பினர்கள் அனைவரையும் இதில் கலந்துகொள்ளுமாறு செயலாளர் வ.இராசதுரை அறிவித்துள்ளார்.

(ஐ-117)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்;மார்ச்.16

யாழ்.உயர் தொழில் நுட்ப நிறுவன மாலை நேர மாணவர்களில் உள்ளக, வெளியக விளையாட்டுக்களில் பங்கு பற்றுகின்ற மாணவர்களுக்கான அவசர கலந்துரையாடல் இன்று காலை 10 மணிக்கு நிறுவனத்தில் நடைபெறும்.

(க-ரி)

## கல்வி அதிகாரிகள் குழு வவுனியாவுக்கு

வவுனியா,மார்ச்16

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி மாணவர்களுக்கிடையே கடந்த திங்களன்று ஏற்பட்ட மோதல சம்பவம் தொடர்பாக பூர்வாங்க விசாரணைகளை நடத்துவதற்கு கல்வியமைச்சின் உயரதிகாரிகள் கொண்ட குழுவொன்று நேற்று வவுனியாவுக்கு விஜயம் செயதது.

இதே வேளை -

மோதல் சம்பவத்தை அடுத்து மேலதிக சிகிச்சைக்காக அனுராதபுரம்வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்ட மாணவர்கள் அனைவரும் வவுனியாவுக்குத் திரும்பியுள்ளனர்.

(க-ரி)


ஐக்கிய இலங்கை ஸ்தல ஸ்தாபன தொழிலாளர் சங்கக் கிளை

திரு.வே.பொ.பாலசிங்கம்

அவர்களைப்

பாராட்டி வாழ்த்துகின்றது



மாநகர ஆணையாளராகப் பணியாற்றி தற்போது வடக்கு ~ கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளராகப் பதவி உயர்வு பெற்றிருக்கும் உயர்திரு வே.பொ.பாலசிங்கம் அவர்களை எதிர்காலம் சுடர்விட்டுப் பிரகாசிக்க வேண்டுமென மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

யாழ்ப்பாணம்

ஐக்கிய இலங்கை ஸ்தல ஸ்தாபன தொழிலாளர் சங்கக் கிளை.

(85514)


## துயர் பகிர்தல்

உடுவில் பிரதேச செயலாளராகவும்,
சண்டிலிப்பாய் பதில் பிரதேச செயலாளராகவும் கடமையாற்றி
எமது சங்கத்துக்கும், பிரதேசத்துக்கும்
அளப்பரிய சேவையாற்றிய

**அமரர் ஆறுமுகம் மகாலிங்கம் (B.A., S.L.A.S.)**


அவர்களின் சேவைகளை நினைவு கூர்ந்து ஆன்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

பணிப்பாளர், பணியாளர்,
பண்டத்தரிப்பு பரிஷ் ப.நோ.கூ.சங்கம்,
பண்டத்தரிப்பு.

(C/15746)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மலர்வு
22
-
05
-
1923



உதிர்வு
14
-
02
-
2001

**அமரர் தம்பிப்பிள்ளை செல்வராசா**
**(சின்னண்ணை)**

எங்கள் அன்புத் தெய்வம்
எங்களை விட்டு மறைந்து
மாதம் ஒன்றானாலும் – அவர் நினைவு
எங்களை விட்டு நீங்காது!

இன்று (16-03-2001) வெள்ளிக்கிழமை காலை 10 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் தொடர்ந்து நிகழும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*நந்தாவில்,*
*கொக்குவில்.*

- குடும்பத்தினர்.

(85512)

# ஆயுதக் கொள்வனவு மோசடியில் முக்கிய அரசியல்வாதிக்குத் தொடர்பு?

லண்டன், மார்ச்16

ஆயுதக் கொள்வனவில் இடம் பெற்ற மோசடி மற்றும் ஊழல்களில், அரசில் உயர் பதவி வகிக்கும் அரசியல்வாதியொருவர் சம்பந்தப்பட்டுள்ளார் என்று சி.பி.டி.என். என்ற செய்தி ஏஜென்சி தகவல் வெளியிட்டுள்ளது.

லஞ்ச ஆணைக்குழுவின் பேச்சாளர் ஒருவரிடமிருந்து இந்தத் தகவலைப் பெற்றதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மிகவும் நுட்பமான ஆயுதங்களைக் கொள்வனவு செய்த போது பல மடங்கு விலைகளைக் குறிப்பிட்டு கோடிக்கணக்கான ரூபா அரசாங்கப் பணம் மோசடி செய்யப்பட்டதாக லஞ்ச ஆணைக்குழு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

சம்பந்தப்பட்ட உயர் அரசியல்வாதி உள்நாட்டு ஆயுத விற்பனையாளர்களை முகவர்களாக்கி அவர்களிடம் 'சந்தோசம்' பெற்றதாகச் சொல்லப்படுகிறது.

பாதுகாப்புத் துறையுடன் தொடர்புடைய உயர் அதிகாரி ஒருவரினதும் அதிஉயர் தலைவரின் அலுவலகத்தின் உயர் அதிகாரி ஒருவரினதும் பெயர்கள் இந்த மோசடி சம்பந்தமாக ஊகங்கள் நிலவிய போதிலும் அவர்கள் இதில் சம்பந்தப்படவில்லை என்று லஞ்ச ஆணைக்குழுவின் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

ஆயுத வியாபாரிகள் தமக்குரிய தரகு வகையில் 15 கோடி ரூபாவுக்கு மேலாக மோசடி செய்துள்ளதாகவும் லஞ்ச ஊழல் ஆணைக்குழு விசாரணைகளை நடத்தி வருவதாகவும் நீதி அமைச்சர் நாடாளுமன்றத்தில் திடுக்கிடும் தகவலை கடந்த செவ்வாய்க்கிழமை வெளியிட்டிருந்தார்.

உயர் மட்டங்களிலேயே இது விடயத்தில் பெரும் ஊழல்கள் நடைபெற்றதாக நீதி அமைச்சர் "ஹிந்துஸ்தான் ரைம்ஸ்" பத்திரிகையின் கொழும்பு செய்தியாளருக்குத் தெரிவித்தார்.

சுத்தமான முறையில் ஆயுதக் கொள்வனவு நடப்பதில்லை என்று கொழும்பிலுள்ள இந்தியத் தூதுவர் கோபால கிருஷ்ணகாந்தி கூறியதையும் நீதி அமைச்சர் தமது நாடாளுமன்ற உரையில் பிரஸ்தாபித்தார்.

நீதி அமைச்சர் வெளியிட்ட திடுககிடும் தகவலைக் கேட்டு இந்த ஊழல் மோசடியில் அமைச்சர்கள் எவருக்கும் தொடர்பு உண்டா என்று ஐ.தே.க. எம்பிக்கள் கேள்விக் கணைகளை அவ்வேளை தொடுத்தனர். (அ)

# பதில் ஜனாதிபதியாக சபாநாயகர்?

ஜனாதிபதியும் பிரதமரும் நாட்டில் இல்லாததால் சபாநாயகர் பதில ஜனாதிபதியாகப் பதவியேற்க வேண்டும் என்று ஐ.தே.கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்று நாடாளுமன்றத்தில் குரல் எழுப்பினர்.

நாடாளுமன்றத்தில் நேற்று ஒழுங்குப் பிரச்சினை ஒன்றை எழுப்பிய ஐ.தே.கட்சி உறுப்பினர்களான ஏ.எச்.எம்.அஸ்வர், லொக்கு பண்டார ஆகியோர் இந்தக்கோரிக்கையை விடுத்தனர். (ஐ-3)

# மகாலிங்கத்தின் இறுதி.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வலிகாமம் தெற்கு பிரதேசம் முழுவதுமே நேற்றுச் சோபையிழந்து காணப்பட்டது. வாழை, தோரணங்களும், பதாகைகளும் நிறைந்து ஆங்காங்கே சோககீதம் இசைக்கப்பட முழுப் பிரதேசமும் சோகமயமாகக் காட்சியளித்தது.

காலையில் அன்னாரது திருநெல்வேலி இல்லத்தில் இறுதிக்கிரியைகள் முடிவுற்ற பின்னர் எடுத்து வரப்பட்ட அவரது பூதவுடல், வலி.தெற்கு பிரதேச செயலகத்தில் பிரமாண்டமான முறையில் அமைக்கப்பட்ட பந்தலில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. ஆசிரியர்கள், மாணவர்கள், உள்ளூர்த் திணைக்கள அதிகாரிகள், படையதிகாரிகள், பொதுமக்கள், விவசாய சம்மேளனப் பிரதிநிதிகள் என ஏராளமானோர் அவரது பூதவுடலுக்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

அங்கு வலி.தெற்கு பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் எஸ்.ஆர்.ஜெயப்பிரகாசம் தலைமையில் அஞ்சலிக் கூட்டம் இடம்பெற்றது.

அங்கிருந்து அவரது பூதவுடல் சுன்னாகம் நகரத்துக்கு எடுத்து வரப்பட்டு, சுன்னாகம் மத்திய சந்தை முன்பாக மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. அங்கு வர்த்தகர் சங்கத் தலைவர் ந.அரசரத்தினம் தலைமையில் அஞ்சலிக் கூட்டம் இடம்பெற்றது. இதில் வர்த்தகப் பிரதிநிதிகள் பலரும், இலங்கை வங்கி உதவி முகாமையாளர், வலி.தெற்கு பிரதேச சபைத் தலைவர் ஆகியோரும் உரை நிகழ்த்தினர்.

அங்கிருந்து ஊர்வலமாக எடுத்து வரப்பட்ட அவரது பூதவுடல் ஏழாலையில் உள்ள சைவச் சிறுவர் இல்லத்தின் முன்பாக அஞ்சலிக்காக வைகக்கப்பட்ட பின்னர், அவரது சொந்த ஊரான குப்பிளானுக்கு எடுத்து வரபபட்டு, குப்பிளான் விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

குப்பிளான் தெற்கு கிராம சேவையாளர் க.பரமநாதன் தலைமையில் அங்கு அஞ்சலிக் கூட்டம் நடைபெற்றது.

ஊர்வலம் வந்த பாதையில் மக்கள் மலர் தூவியும், மலர் மாலை அணிவித்தும் அஞ்சலி செலுத்தினர். பல்வேறு பொது அமைப்புக்கள் துண்டுப் பிரசுரங்களையும் விநியோகித்தன. புளொட், ஈ.பி.டி.பி. ஆகிய கட்சிகள் வீதிகளில் பதாகைகளைக் கட்டி அஞ்சலி செலுத்தினர்.

குப்பிளானிலிருந்து பூதவுடல் இறுதி ஊர்வலம் புன்னாலைக் கட்டுவன் வழியாக பலாலி வீதியூடாக திருநெல்வேலிக்கு எடுத்து வரப்பட்டது. நல்லூர்ப் பிரதேச செயலகம், நல்லூர்ப் பிரதேசசபை, கலாமன்ற சனசமூக நிலையம் ஆகிய இடங்களிலும் பூதவுடல் அஞ்சலிக்கு வைக்கபட்டது. அங்கும் இரங்கல் உரைகள் நிகழ்த்தப்பட்டன.

நேற்று மாலை சுமார் 6.15 மணியளவில் அமரர் மகாலிங்கத்தின் பூதவுடல பெருந்திரளான மக்கள் திரண்டு நிற்க திருநெல்வேலி மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

(அ-27-86)

## கல்வி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போக்குவரத்து நெருக்கடிகள் குறித்து விளக்கினார்.

யாழ்ப்பாண மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளுக்குத் தேவையான உபகரணங்கள், பாடநூல்கள், இரசாயனப்பொருள்கள் ஆகியவற்றை திருகோணமலையில் இருந்து எடுத்துச் செல்வதற்கு 1989 ஆம் ஆண்டில் இருந்து செஞ்சிலுவை சர்வதேசக் குழு கப்பல் வசதி வழங்கி வந்தது என்றும் -

கல்வி அதிகாரி அங்கு சுட்டிக் காட்டினார்.

யாழ்ப்பாணத்துக்கான கல்வி உபகரணங்களை திருகோணமலையில் இருந்து கொழும்புக்கு எடுத்துச் செலவதிலும் அங்கிருந்து கப்பலில் அவற்றை அனுப்பி வைப்பதிலும் உள்ள சிரமங்கள், தாமதங்கள் குறித்தும் அவர் எடுத்துக் கூறினார்.

இதற்குப் பதில் அளித்த செஞ்சிலுவை சர்வதேசக்குழு அதிகாரியான மார்க்கோ -

தமது கப்பல்களில் மருந்துப் பொருளகளையும் அரசசார்பற்ற நிறுவனங்களுக்கான நிவாரணப்பொருள்களையும் மட்டுமே எடுத்துச் செல்ல முடியும். அரசாங்கத்தின் ஓர் அங்கமான கல்வித் திணைக்களத்தின் பொருள்களை அனுப்புவதற்கான போககுவரத்தை அரசாங்கமே ஒழுங்கு செய்யவேண்டும் என்று தெரிவித்தார்.

(ஐ-3)


யாழ். மாநகர சபையின் கீழ் இயங்கும்


# தாய், சேய் நலன் கிளினிக்குகள் நான்கு நாள்களாக செயலிழப்பு!

## நூற்றுக்கணக்கான குழந்தைகள் பாதிப்பு

யாழ்ப்பாணம், மார்ச்16

யாழ்மாநகர சபையின் கீழ் செயற்படும் தாய், சேய் நலச் சிகிச்சை நிலையங்கள் கடந்த நான்கு தினங்களாக செயலிழந்துள்ளன.

இந்த சிகிச்சை நிலையங்களில் சிகிச்சை பெற்று வந்த நூற்றுக்கணக்கான தாய்மார்களும், குழந்தைகளும் இதனால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

சிகிச்சை நிலையங்களில் கடமை புரியும் குடும்ப நல சேவையாளர்களில் 26 பேர் தங்கள் சேவையை மட்டுப்படுத்தியதை அடுத்தே இந்த நிலைமை ஏற்பட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது.

சம்பளம் மற்றும் போக்குவரத்துப் படி, கோலவுடைகள் வழங்கப்படாமை ஆகியவற்றுக்கு எதிர்ப்புத் தெரிவித்தே இவர்கள் திடீரென தங்கள் சேவைகளை மட்டுப்படுத்திக் கொண்டுள்ளனர்.

இதனால் சிகிச்சை நிலையங்களில் பணிகள் ஸ்தம்பித்துப் போயுள்ளன.

யாழ்.மாநகர சபையின் முதல்வருககும் ஆணையாளருக்கும் சுகாதார வைத்திய அதிகாரியூடாக தெரிவித்த பின்னரே தாங்கள் இந்தப் போராட்டத்தில் குதித்துள்ளதாக குடும்ப நல சேவையாளர்கள் தெரிவித்தனர்.

கிளினிக் சேவைகள் மட்டுப்படுத்தப்பட்ட போதும் கர்ப்பிணித் தாய்மார் மற்றும் குழந்தைகளின் நன்மை கருதி நாவலர் வீதி, கீரிப்பிள்ளையார் கோயிலடி மற்றும் யாழ். மடத்தடிப் பகுதிகளிலுள்ள இரு கிளினிக்குகள் மட்டும் இயங்கி வருவதாக மாநகர சபையின் சுகாதாரப் பகுதி வட்டாரங்கள் தெரிவித்தன.

ஆனால் நேற்று இந்த இரு சிகிச்சை நிலையங்களில் ஒன்றில், குழந்தைகளுக்கான தடுப்பூசி ஏற்றிக் கொள்ள பல தாய்மார்கள் வந்து காத்திருந்த போதும் பெண்களுக்கான கர்பத்தடை ஊசி மட்டுமே அங்கு போடப்பட்டதால் குழந்தைகளுடன் வந்த தாய்மார்கள் ஏமாற்றத்துடன் திரும்பினர்.

ஒரு பகுதி ஊழியர்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினையால் நூற்றுக்கணக்கான குழந்தைகளின் நல சிகிச்சைகள் பாதிக்கப்படுவது குறித்து பொதுமக்கள் மத்தியில் விசனம் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை-

தாய், சேய் நல சிகிச்சை நிலையங்களை இன்று முதல் முழு அளவில் இயங்கச் செய்வதற்கான ஏற்பாடுகளில் மாநகர சபை நிர்வாகம் ஈடுபட்டிருப்பதாக அறிய வந்தது.

(ஐ-5)

## ஐரோப்பிய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரிட்டனில் பயங்கரவாத அமைப்புக்களின் பட்டியலில் விடுதலைப் புலிகள் அமைப்பு சேர்க்கப்பட்டதைத் தொடர்ந்து ஐரோப்பிய நாடுகளில் ஏற்பட்டிருக்கும் சூழ்நிலை குறித்தும் ஐரோப்பிய ஒன்றியத் தலைவருடன் ஜனாதிபதி பேசுவார் என்று அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-10)

## அமெரிக்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திருத்திகளும் நேற்றுக்கூடி ஆராய்ந்த பின்னர் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

'தமிழ் மக்களின் அபிலாஷை சுயநிர்ணய உரிமையே' என்பதை இந்த எழுச்சி நிகழ்வில் வலியுறுத்துவதெனவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

(ஐ-3-6)

## 21 அமைப்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வரும்.

தடைசெய்யப்பட்ட அமைப்புக்கள் தமது பக்க நியாயங்களை முன்வைத்து தடைக்கு எதிராக மனுச் செய்ய வசதி செய்யப்பட்டிருப்பதாகவும்-

அவ்வாறு மனுச் செய்யும் பட்சத்தில் அந்த அமைப்பு மீதான தடை மனு விசாரிக்கப்பட்டு இறுதிமுடிவு வெளியிடப்படும்வரை இடைநிறுத்தி வைக்கப்படும் என்றும் - பிரிட்டிஷ் உள்துறை அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (ஐ-3)

## உலக வங்கிக் குழு புலிகளுடன் பேச்சு

மட்டக்களப்பு,மார்ச்16

மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள படுவான்கரைப் பகுதியில் மேற்கொள்ளப்படவிருக்கும் நீர்ப்பாசனத் திட்டங்கள் தொடர்பாக விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகளுடன் உலக வங்கிப் பிரதிநிதிகள் கலந்துரையாடி உள்ளனர்.

உலக வங்கியின் இலங்கை வதிவிடப் பணிப்பாளர் மரியானோ தொரடோவேனா, திட்டப்பணிப்பாளர் நிஹால் பெர்னாண்டோ ஆகியோர் மட்டக்களப்புக்கு நேற்று முன்தினம் விஜயம் செய்தனர்.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் வழித்துணையுடன் நேற்று முன் தினமும் நேற்றும் இவர்கள் அங்கு விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்கும் சென்றனர்.

(ஐ-3-7-21)

## முகமாலையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

13 ஆம் திகதி படையினர் மேற்கொண்ட திடீர் தாக்குதலின் போது விடுதலைப் புலிகள் உறுப்பினர்கள் ஒன்பது பேர் இறந்திருக்கலாம் அல்லது காயமடைந்திருக்கலாம் என்றும் தகவல் நிலையம் மேலும் தெரிவித்தது. (ஐ-3-10)


நகரத்தில் மீண்டும் சிகரத்தை நோக்கி..

BEACON

(வெலிங்டன் சந்தியருகில்)

கணக்கீடு

திரு.பாலவாசன்

(B.B.A. F.M. SPL.)

A/L 2001

DAY CLASS

கிரயக்கணக்கீடு

19/03/01- Mon -11 a.m.

(85497)

G.C.E.(O/L), தரம் 10

விஞ்ஞானப் பரீட்சைகள்

✪ ஞாயிறு (18-03-01), திங்கள் (19-03-01) ஆகிய தினங்களில் சகல இடங்களிலும் நடைபெறும்.

✪ விவரம் ஞாயிறு (11-03-01) உதயனில் உள்ளது.

விஞ்ஞானம்

GRAPHS குமரன்

மாணவர்கள், விரும்பும் பரீட்சை நிலையங்களில் உங்கள் பெயர்களை *இன்றும் நாளையும்* பதிவு செய்து சுட்டெண் (Index No.) ஐப் பெற்று எமக்கு ஒத்துழைப்பு வழங்கவும். (85429)

விக்ஸா

கல்வி நிறுவனம்

A/L 2002

பொதுப் பொருளாதாரம்

M.விக்கி

B.A.(Eco.Spl) HONS

ஆரம்பம்:17.03.2001 (நாளை)

காலை 8 மணி

(85488)

விற்பனைக்குண்டு

HONDA CB.125

விற்பனைக்குண்டு.

தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:

பவன், நாதன்

புடவை மாளிகை

பரமேஸ்வராச் சந்தி,

(C/15747) திருநெல்வேலி

தேவை

சமைக்கத் தெரிந்தவரும் உணவு பரிமாறுபவரும் (சப்ளைக்கு - ஆண்கள்) தேவை.

ஹோட்டல்

370, ஆஸ்பத்திரி வீதி,

(85491) யாழ்ப்பாணம்.

வட இலங்கைச் சங்கீத சபை

புதிய பாடத்திட்டம் விற்பனைக்கு வந்துள்ளது. பிரதி ஒன்றின் விலை ரூபா 100.00 தபால் மூலம் பெறவிரும்புபவர்கள் ரூபா 130.00 பெறுமதியான காசுக்கட்டளையை அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

*வலயக் கல்விப்பணிமனை,*
*செம்மணி வீதி,*
*யாழ்ப்பாணம்.*
*15-03-2001* (C/15732)

திருமதி செ.மகாலிங்கம்
யாழ். வலயக் கல்விப் பணிப்பாளரும்
வட இலங்கைச் சங்கீத சபைத் தலைவரும்.

நன்றி நவிலல்

"அன்பிற்கும் உண்டோ
அடைக்குந் தாழ்"

*வலி. தெற்கு பிரதேச செயலரும்,*

*பதில் பிரதேச செயலாளர் - நல்லூர் பிரதேச செயலகம்.*

*இந்துசமயப் பேரவை உபதலைவருமாகிய*

திரு.ஆ.மகாலிங்கம்

அவர்களின் இறுதிச் சடங்கில் பங்குபற்றி இரங்கலுரைகளை நிகழ்த்திய பெருமக்களுக்கும், கலந்துகொண்ட அனைத்து அன்பு உள்ளங்களுக்கும், இறுதி ஊர்வலம் சிறப்புற நடத்த வழிவகுத்த பேரன்பு கொண்ட பெருமக்களுக்கும், ஏனைய அனைத்து வழிகளாலும் அஞ்சலியைச் செலுத்தியதுடன், உதவிகளையும் செய்த அன்பு நெஞ்சங்களுக்கும், வைத்தியசாலையில் வைத்திய உதவி புரிந்த வைத்திய நிபுணர்கள் மற்றும் உதவியாளர்களுக்கும் நெஞ்சிருக்கும் வரை நினைவிருக்க நன்றிகளை நவில்கின்றோம்.

அன்பு மனைவி:
ம.சிவகாமசுந்தரி பேபி
ஆசைமகள்:
ம.சியாமளா.

(C/15748)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 16. 03. 2001இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.